Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்



# கண்ணோட்டம்

KANNODDAM

கண்ணோட்டம்

வெளியீடு :- 83 ஜூன் 2017 விலை ரூபா :- 10.00

# மாகாணசபைக்கு மக்கள் மீது கரிசனை வேண்டும்

## "விதியே விதியே தமிழ் சாதியை என்செய நினைத்தாய்"

விடுதலையின் பெயரில் நிகழ்ந்த யுத்தம், போராட்டத்தின் போது சகோதரப்படுகொலை, சகோதர சமூகங்கள் மீதான தாக்குதல்கள் எனத் துருத்திக் கொண்டு நின்றன

வடமாகாண அரசாங்கம், நிர்வாகம் தலைமைத்துவம் என்று வரும் போது அதிகார துஸ்பிரயேகம், ஊழல், கழுத்தறுப்பு எனத் துருத்திக்கொண்டு நிற்கின்றன.

இந்த இரண்டு விடயங்களுமே மக்களின் பேரில் நிகழந்தன. ஆனால், மக்கள் பற்றிய் பொறுப்புணர்வு இந்த இரண்டு செயற்பாடுகளிலும் இருக்கவில்லை.

"ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பார்கள்.

தமிழ் தலைமைத்துவம் என்பது எதற்கு லாயக்கானது என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடிவில்லை.

( தொடர்ச்சி 10 ம் பக்கம் )



## நினைவழியா நாட்கள்

ஒரே பாதையில் கரம் கோர்த்துப் பயணித்த நாள்களை நினைத்துப் பார்க்கிறோம். அன்னாருக்கு எம் அஞ்சலியை உரித்தாக்குகிறோம்ட



# 27 ஆவது தியாகிகள் தினம் ஜூன் 19

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் சமூகத்தில் ஜனநாயகத்திற்காகவும், உழைக்கும் மக்களின் விடிவிற்காகவும் தம் உயிரை அர்ப்பணித்த தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூரும் தினம்


## பத்மநாபா மக்கள் முன்னணி (P.P.F)



ஸ்டாலின் அண்ணா



தோழர் சின்னவன்
திருகோணமலை



தோழர் குமார்
தம்பிலுவில்



தோழர் சிவா
கல்லாறு



தோழர் முகுந்தன்
மூளாய்



தோழர் ஐயா
கண்ணாட்டி




தோழர் பெஞ்சமின்
பொகவந்தலாவை



தோழர் கபூர்
பருத்தித்துறை



தோழர் ரெட்ணம்
வங்காலை



தோழர் நடேசலிங்கம்
வவுனியா



தோழர் நிதி
அக்கரைப்பற்று



தோழர் அருள்
மண்டூர்



தோழர் ரஞ்சித்
களுவாஞ்சிக்குடி



தோழர் ஜோர்ச்
திருகோணமலை



தோழர் கதிர்
கிளிநொச்சி



தோழர் சுந்தர்
முல்லைத்தீவு



தோழர் கொட்வின்
புதுக்குடியிருப்பு



தோழர் கணேஸ்
காரைதீவு



தோழர் ராபீக்
யாழ்ப்பாணம்



தோழர் சுந்தர்
திருகோணமலை



தோழர் ஜெஸ்லி
முல்லைத்தீவு



தோழர் ரஞ்சித்
தம்பிலுவில்



தோழர் ரேகன்
வவுனியா



தோழர் ரவி
மானிப்பாய்



தோழர் நகுலன்
கோப்பாய்

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்
KANNODDAM




sdptoffice@gmail.com
294 A, கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022

## பாவம் மக்கள்

மக்கள் என்ன நோக்கத்திற்காக மாகாணசபையை உருவாக்கினார்களோ அந்த நோக்கத்திற்கு மாறாக மாகாணசபை செயற்பட்டிருக்கிறது. “இன்று புதிதாய் பிறந்தோம்” என்றவாறு சிலாகிக்கப்பட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் உருவான மாகாணசபை மூன்று ஆண்டுகள் கடந்து முடிவுறும் தறுவாயில் ஊழல், அதிகார துஸ்பிரயோகம் என்ற நிலையை எய்தியுள்ளது. மக்களின் பெரும் எதிர்பார்ப்புடன் உருவாக்கப்பட்ட இந்த மாகாணசபை இந்த நிலையை எய்தியது துரதிஸ்டமானதாகும்.

தன்னலம் மறந்து உயிர்தியாகம் செய்தவர்களை எள்ளிநகையாடுவதாகவே இந்த செயற்பாடுகள் அமைகின்றது.

மக்களின் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்ட நிலையில் மாகாணசபை முதல்வர் உட்பட செயற்பட முடியாத முடங்கிய நிலையை அடைந்திருப்பதும் அதிகாரச் சண்டையில் ஈடுபட்டிருப்பதும் மக்கள் தொடர்பான கரிசனை பொறுப்புணர்வு பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன.

முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு? அறிக்கை தனிப்பட்ட அமைச்சர்கள் மாத்திரமல்ல அமைச்சரவை தொடர்பாகவும் கேள்விகளை எழுப்புகின்றன. முதலமைச்சர் உட்பட இதற்கு தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சினை அதன் இரத்தம் தோய்ந்த வரலாறு பெருவாரியான மனித உயிர்கள் தியாகம் செய்யப்பட்டு உருவான மாகாணசபை கேலிக்கும், நகைப்புக்கும் உரியதாக மாறியது துர்ப்பாக்கியமுமாகும்.

வடக்கு கிழக்கு மாகாணசபைகள் சர்வதேச மட்டத்தில் அவதானத்திற்குரியவை. ஆனால், இன்று வடமாகாணசபை கையாலாகதது என்ற பெயரே உலகளாவிய அளவில் நிலைநாட்டப்பட்டுள்ளது. இது வெட்கமும், அவமானகரமானதும் ஆகும். இந்த மாகாணசபையை தெரிவு செய்த மக்களுக்கு செய்த துரோகமும், அநியாயமுமாகும்.

இந்த வட மாகாணசபை நிறுவப்பட்டதிலிருந்து மக்களுக்கு ஆற்றப்பட்ட சேவைகள் எவை? வேலைத்திட்டங்களை முன்நகர்த்துவதற்கு இச்சட்டசபையில் எத்தனை நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறன்றன என்ற கேள்விகளை அடுக்கினால் வெறுமையே மிஞ்சுகிறது.

விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுற்றாடல் இன்ன பிற விடயங்கள் தொடர்பில் மாகாணமட்டத்தில் எத்தகைய குறிப்பிடத்தகுந்த மாற்றங்கள் எற்படுத்தப்பட்டிருக்கின்றன. மக்களின் வாழ்வு இலகுபடுத்தப்பட்டிருக்கிறது. என்ற கேள்விகளுக்குப் பதில் எதுவும் இல்லை.

மக்கள் நிலத்திற்காக, குடும்பத் தலைவரை இழந்த் பெண்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்காக: காணாமல் போனவர்களின் குடும்பங்கள், உறவினர்கள்: இளைஞர்களும் யுவதிகளும் வேலைவாய்ப் பிற்காக: நீருக்காக: இன்ன பிற தேவைகளுக்காக 100 நாட்கள் தாண்டி போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால், மக்களின் இந்த பிரச்சினைகள் எல்லாம் 2 ஆம் 3 ஆம் பட்சமாகி மகாணசபை அதிகாரத்திற்கான குடுமிபிடி சண்டைகள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

இங்கு அதிகார சக்திகள் கன்னை கட்டி நிற்பதற்கு திரண்ட கூட்டம் சாதாரண மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளுக்கான போராட்டங்களிற்கு திரளவில்லை.

முன்னறிவித்தல் எதுவுமற்ற ஹர்த்தால் மக்களின் அன்றாட வாழ்வில் மேலும் துன்பங்களை சுமத்தும் விதமாக சடுதியாக திணிக்கப்பட்டது.

இப்போதெல்லாம் ஊடகங்களில் அதிகாரத்திற்கு போராடும் கோஷ்டிகளின், தனி மனிதர்களின் பெயர்களே முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

உணர்ச்சியூட்டும், போதையூட்டும் அரசியல் சதி சூதாட்டம் முன்நிலைப் படுத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் தங்களுக்கு விமோசனத்தை ஈட்டித் தருவார்கள் என்று கருதியவர்கள் இப்படித்தான் நிற்கிறார்கள். அந்த மக்களை இந்தக் கணங்களில் அவர்கள் மறந்துபோனார்கள்.



சாத்திரங்க ளொன்றுங் காணார் -பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன் றாயிருந்தாலும் -ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்

### கட்சிக்கு வளமும் பலமும் சேர்த்தவர்கள்



தோழர் புஸ்பராசா
பிரான்ஸ்



பரா மாஸ்டர்
ஜேர்மனி



தோழர் உமாகாந்தன்
பிரான்ஸ்

ஜனநாயக இடைவெளி மறுக்கப்பட்ட
நெருக்கடி மிக்க காலங்களிலும்
உள்ளூரிலும், வெளிநாடுகளிலும்
துணிச்சலான தமது வீரியம் மிக்க
எழுத்துக்களாலும், கருத்துக்களாலும்
கட்சிக்கு வளமும், பலமும் சேர்த்தவர்களை
தியாகிகள் தினத்தில் நினைவுகூருவோம்



தோழர் வீ.ஏ.கந்தசாமி
நவாலி

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
## Social Democratic Party of Tamils (S.D.P.T)

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற
கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 7 ஆம் பாகம் )

### 14. புலிகளால் பாதிக்கப்பட்ட போராளிகள் தொடர்பாக :-

புலிகளால் பாதிக்கப்பட்ட ஏனைய தமிழர் இயக்கங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளை இலங்கை அரசோ அல்லது சர்வதேச சமூகமோ யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் என்ற வகைக்குள் உள்ளடக்குவதில்லை. இவர்களிற் பலர் இன்னமும் தாம் வாழும் சமூகத்தில் கௌரவமாக வாழுவதற்கும், சுய உழைப்பால் போதிய வருமானம் பெறுவதற்கும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தின் புனர்வாழ்வுத் திட்ட உதவிகளோ அல்லது வீட்டு உதவித் திட்டங்களோ கிடைக்க முடியாத வகையில் அரசாங்கத்தாலும், அரச நிர்வாக அமைப்புக்களாலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்விடயத்தை அக்கறையுடன் கவனத்திற் கொண்டு, இலங்கை அரசு இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு காலம் தாழ்த்தாது உதவ வேண்டும்.

### 15. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் அங்கவீனமானோர் :-

யுத்தத்தினால் தமது கணவன்மாரை இழந்து பாதிக்கப்பட்டு நிற்கும் பெண்கள் பல்லாயிரக் கணக்கானோர். இவர்களிற் பெரும்பாலானோர் தமது குடும்பங்களைத் தலைமை தாங்கி பராமரிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதேபோல யுத்தத்தால் உடலுறுப்புக்களை இழந்து கௌரவமான வாழ்க்கைக்காக இன்னமும் போராடிக்கொண்டிருப்போர் ஆயிரக்கணக் கானோர், முன்னாள் போராளிகள் என அழைக்கப்படும் ஆயிரக்கணக்கானோர் இப்போது நாளாந்தக் கூலிகளாக அரைகுறை வருமானங்களோடு தமது குடும்பங்களைப் பராமரிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். எனவே, யுத்தத்தால் பாதிக்கப்பட்டு குடும்ப பாரத்தைச் சுமந்து நிற்கும் இந்தப் பெண்களுக்கும் மற்றும் யுத்தத்தால் உடலுறுப்புக் களை இழந்தோருக்கும் தாராள மனம் கொண்டு காலம் தாமதியாது அவர்களது கௌரவமான மறுவாழ்வுக்கான திட்டங்களை இலங்கை அரசும், வடக்கு கிழக்கு, மாகாண ஆட்சிகளும், சர்வதேச சமூகமும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### 16. புலிகளின் பினாமிகளிடம் உள்ள மக்கள் சொத்துக்கள் :-

யுத்தத்தால் இறந்தோர்களையும், உடலுறுப்பு இழந்தோர், கணவனை இழந்தோரையும், காணாமற் போனோரையும் வைத்து அரசியல் மற்றும் ஊடக வியாபாரங்கள் செய்வோரும், அவற்றைப் பேசிப்பேசி சமூக முக்கியத்துவம் பெறும் புத்திஜீவிகளும் இங்கு அதிகம் பேர் உள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்டோர் பற்றி எந்தவித அக்கறையும் அற்றவர்களாகவே இந்த வியாபார புத்திஜீவிகள் உள்ளனர். புலிகளால் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பணமாகவும் தங்கமாகவும் தமிழ் மக்களிடம் இருந்து நேரடியாக மிரட்டியும், தமது வலிமையான பிரச்சாரங்கள் மூலமும் திரட்டப்பட்ட பெருந்தொகை சொத்துக்கள், உள்நாட்டிலும், உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ளோர் பலரிடம் கோவில்களாகவும், திருமண மற்றும் கலாசார மண்டபங்களாகவும், வியாபார நிறுவனங்களாகவும், பலமாடி வீட்டுக் கட்டிடங்களாகவும் புலி ஆதரவுப் பினாமிகளிடம் சொத்துக்களாக இருந்தன. பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான இந்த பொதுச் சொத்துக்கள் அனைத்தும் புலித் தலைமைகளின் அழிவோடு பினாமிப் பேர்வழிகளினால் அவர்களின் தனிப்பட்ட சொத்துக்களாக மாற்றப்பட்டுவிட்டன. இலங்கை மற்றும் இந்திய அரசுகளும், அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளும் தத்தம் நாடுகளில் இந்த புலிப்பினாமிகளிடம் அகப்பட்டுள்ள தமிழ் மக்களின் சொத்துக்களை மீட்டு முன்னாள் போராளிகளுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் பயன்படுமாறு செய்ய வேண்டும்.

### 17. இடம்பெயர்க்கப்பட்டோருக்கு உரிய புனர்வாழ்வு :-

யுத்தத்தால் இடம்பெயர்ந்து இறுதியில் எதுவுமற்றவர்களாக ஆக்கப்பட்ட ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டோரில் பெரும்பான்மையானவர்கள் இப்போது அவரவரது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகளும், மீண்டும் அவர்கள் தமது சமூக பொருளாதார வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான சில உதவிகளும் அரசாங்கத்தினாலும், இந்திய அரசாலும், சர்வதேச நிறுவனங்களினாலும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களாலும் வழங்கப்பட்டன. ஆனாலும், மீள்குடியேறிய மக்களிற் பெரும்பாலானோர் இன்னமும் தங்களைத் தாங்களே பொருளாதார ரீதியாக, கௌரவமான முறையில் தக்க வைத்துக் கொள்ளவும், சமூகரீதியாக தங்களது சுயமரியாதையைக் காத்துக் கொள்ளவும் முடியாதவர்களாகவே உள்ளனர்., எனவே, இந்த மக்களுக்கு இலங்கை அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளை போதிய அளவு விரைந்து செய்ய வேண்டும்.

### 18. உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட வேண்டும் :-

யுத்தத்தின் பாதகமான விளைவுகளில் ஒன்று உயர் பாதுகாப்பு வலயங்களின் உருவாக்கம். இவ்வாறாக ஆக்கப்பட்ட நிலங்களில் சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மக்கள் மீளக் குடியேறுவதற்கு விடப்பட்டாலும், இன்னமும், பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களின் துயரங்கள் எப்போது முற்றாக முடிவுக்கு வரும் என்பது தெளிவாகத் தெரியாத நிலையே இன்னமும் உள்ளது. இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம் உடனடியாக பொதுமக்களின் காணிகளை விடுவித்து அவர்கள் அவர்களும் காலதாமதமின்றி குடியேற வழிவகுக்க வேண்டும். *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்புக்கு இலக்கணமாய் காரியத்தில் உறுதியாய் ...

## தோழர் றொபேட் (த. சுபத்திரன்) 14 ஆவது ஆண்டு நினைவாக

தோழர் றொபேட் சுய கட்டுப்பாடும், ஆழுமையும், பலதுறை ஆற்றலும் வாய்ந்த ஒருவராக ஈபிஆர்எல்எவ் இன் உருவாக் கத்திலும், வளர்ச்சியிலும் காத்திரமான பங்கை நல்கியவர். தோழர் றொபேட் சக தோழர்களிடம் நட்போடும் அதே நேரம் வேலைகளில் கறாராகவும் அவர்களின் தேவைகள், பிரச்சினை களில் அக்கறையெடுத்துக்கொண்ட செயற்திறன் மிக்க ஒருவராக வாழ்ந்து காட்டியவர். இதனால் கட்சிக்கு உள்ளேயும், கட்சிக்கு வெளியிலும் பெருமளவானவர்களின் அன்பையும், நம்பிக்கை யையும் பெற்ற ஒருவராகத் திகழ்ந்தார்.

அவரது வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு பின்னணியிலும், பக்க பலமாகவுமிருந்து திட்டமிடவும், செயற்படுத்தவும் அர்ப்பண உணர்வோடு ஒருமித்து கருமமாற்றிய தோழர்களின் பங்களிப்புக்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூருவது பொருத்தமும், அவசியமுமாகும்.

அந்தவகையில் அவரது அரசியல், இராணுவ நடவடிக்கைகளில் மிக நெருக்கமாகவும், கூட்டாகவும் செயற்பட்டு, வெவ்வேறு கால கட்டங்களில் உயிரிழந்த தோழர்கள் ரமேஷ், சிவா, இந்திரன், குமார், சுதன், செல்வம், கஸ்ரோ, இளங்கோ ஆகியோர் இங்கு குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.



தோழர் ரமேஸ்



தோழர் கஸ்ரோ



தோழர் இளங்கோ



தோழர் குமார்


தோழர் ரமேஸ் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தின் உருவாக்கத்திலும், அதன் வளர்ச்சியிலும் தீவிரமாகவும், விசுவாசமாகவும் உழைத்த ஒருவர். அவரது இந்த தீவிர ஈடுபாடும் தான் அவர் மிகவும் நேசித்த, கட்டிவளர்த்த இயக்கத்திற்குள் 1986 இல் விரிசல் ஏற்படுவதற்கும் ஒரு காரணமாகும். இதனால் ஈபிஆர்எல்எவ் இலிருந்துவிலகி ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை ஸ்தாபிப் பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் தன்னை அர்ப்பணித்தவர். அரசியலிலும், ஊடகத்துறையிலும் தனது ஆளுமையால் முத்திரை பதித்த அவர் இறக்கும் வரை தோழர் றொபேட் மீது மதிப்பை கொண்டிருந்ததுடன் நட்பையும் பேணிவந்தார். அவரது தீவிர போக்கு, மாறுபட்ட கருத்துக்களை சகிக்காத எமது அரசியல் சூழல் என்பன பன்முக ஆளுமை மிக்க அவரது உயிரையும் காவுகொண்டது.

மட்டக்களப்பு வேலைகளுக்கு பொறுப்பாகவும், இணைப்பாளரா கவும் செயற்பட்ட தோழர் சிவா குறித்து தோழர் றொபேட் உயர் வான அபிப்பிராயத்தை கொண்டிருந்தார். மட்டக்களப்பில் ஈபிஆர்எல்எவ் இற்கு அடித்தளத்தை இட்டவர்களில் தோழர் சிவா பிரதானமான ஒருவராவார். ஈபிஆர்எல்எவ் இன் உள்ளேயும் இதர இயக்கங்கள் மத்தியிலும் அவ்வப்போது தலைதூக்கிய பிரதேசவாதத்தை அவரிடம் காணவில்லை என தோழர் றொபேட் குறிப்பிட்டது நினைவிலுள்ளது. தோழர் சிவா மற்றும் தோழர்கள் கீர்த்தி, நிதி, நிர்மல், லோஸ் ஆகியோர் 29.03.1985 அன்று விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலில் உயிரிழந்தனர்.



தோழர் றொபேட் (த. சுபத்திரன்)

தோழர் செல்வம் மயிலிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். எண்பதுகளின் தொடக்கத்தில் இயக்கத்தின் கடல்வழிப் போக்குவரத்துக்களுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டவர். அவரது குடும்பத்தவர்கள் அனைவருமே ஈபிஆர்எல்எவ் இன் வளர்ச்சிக்கு பங்களித்தார்கள். 1984 இல் அரச படைகளால் கைது செய்யப்பட்டு 2 வருடங்கள் வரை சிறைவாசம், சித்திரவதைகளுக்கு உள்ளான தோழர் செல்வம் சிறையிலிருந்து விடுதலையான பின்னரும் கட்சிவேலைகளை தொடர்ந்தார். 1990 ஆம் ஆண்டு படகில் இந்தியாவிற்கு சென்று கொண்டிருந்தபோது புலிகளால் கைது செய்யப்பட்ட அவரது மனைவி பலத்த சித்திரவதைகளின் பின் கொல்லப்பட்டார். - புலிகளின் கடற்படை தளபதி சூசையின் மனைவியையும், அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ் செல்வனின் மனைவியையும் இன்னும் பலரையும் இலங்கை இராணுவம் பிடித்து விடுவித்திருப்பது இந்த இடத்தில் நினைவுக்கு வருகிறது. - தோழர் செல்வம் இறுதியில் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு அவரது நிலமை சீரழிவுக்குள்ளானது துயரம் மிக்கதாகும்.



தோழர் சிவா



தோழர் இந்திரன்

தோழர் கஸ்ரோ அச்சக வேலைகளில் அபார திறமைவாய்ந்தவர். ஆரம்பகாலத்தில் இயக்கத்தின் பல்வேறு பிரசுரங்களையும் அச்சிடுவதற்கு காரணமாக இருந்தவர். இராணுவ நடமாட்டமும் கெடுபிடிகளும் நிலவிய காலத்தில் ஆயுதப் பயிற்சி பெற வந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களின் இடைத் தங்கல் முகாம் போலவே அவரது இருப்பிடம் பயன்பட்டது. அவர் வாகன விபத்தில் உயிரிழக்க நேர்ந்தது பேரிழப்பாகும்.

தோழர் குமார் வயதில் இளையவராய் இருந்தபோதும் அரசியல் ரீதியில் தெளிவும், மனஉறுதியும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் மீது பரிவும் கொண்டவராக தோழர் றொபேட்டின் அனைத்து செயற்பாடுகளுக்கும் உறுதுணையாய் இருந்தவர். 1985 இல் தோழர் றொபேட் இர்ாணுவத்தின்ரால் கைது செய்யப்பட்ட போது அவரோடு மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த தோழர் குமார் சம்பவ இடத்திலேயே இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கர்கி உயிரிழந்தார்.



தோழர் செல்வம்



தோழர் சுதன்

தோழர் றொபேட்டின் இளமைக்கால நண்பனான தோழர் இந்திரன் தொடர்ந்து இயக்க வேலைகளில் தோழனாக தோளோடு தோள் நின்று செயற்பட்டவர். 1986 இல் புலிகள் ஈபிஆர்எல்எவ் மீது தாக்குதல் தொடுக்கும் வரை ஈபிஆர்எல்எவ் இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படைக்கு சாவகச்சேரி பிரதேசத்தில் பொறுப்பாக இருந்து செயற்பட்டவர். 1989 இல் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட அவரது சகோதரர் ஒருவர் காணாமலாக்கப்பட்டார். புலிகளால் நாடுகடத்தப்பட்ட அவரது பெற்றோர் தமிழகத்தின் இலங்கை அகதிகள் முகாமிலேயே அடக்கம் செய்யப்பட நேர்ந்தது. 1995 தொடக்கம் 1999 வரை ஈழமக்கள் ஜனநாயக கட்சியுடன் இணைந்து செயற்பட்ட தோழர் இந்திரன் 1998 இல் நடைபெற்ற உள்ளுராட்சி மன்ற தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். 2000 இன் பின் மீண்டும் ஈபிஆர்எல்எவ் இல் இணைந்து தோழர் றொபேட்டின் தலைமையின் கீழ் செயற்பட்டார். சென்னை, அம்பத்தூரில் குடும்பத்தினருடன் தங்கியிருந்தவேளை 15.04.2011 தனது 52 வயதில் இயற்கை எய்தினார்.

தோழர் சுதன் ஈபிஆர்எல்எவ் இன் பிரச்சார நடவடிக்கைகளிலும் இராணுவ நடவடிக்கைகளிலும் பிரதான பாத்திரம் வகித்தவர். இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு தேடுதல்களுக்கு மத்தியில் தோழர் றொபேட் இயக்கப் பணிகளை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக, ஆரவாரமின்றியும் உறுதியாகவும் கருமமாற்றியவர் எந்தகைய சந்தர்ப்பத்திலும் அவரிடம் பதட்டத்தையோ, அச்சத்தையோ காணமுடியாது. 1986 நடுப்பகுதியில் இயக்கத்திற்குள் நிலவிய முரண்பாடுகளால், அணிசேர்ந்து தோளோடு தோள் நின்ற தோழர்களுக்கு எதிராக துப்பாக்கியை உயர்த்த நேர்ந்துவிடும் என்ற மன உளைச் சலினால் இயக்க வேலைகளிலிருந்து ஒதுங்கிக்கொண்டார். ஆனாலும் இயக்கத்தையும், தோழர்களையும் விட்டு முழுமை யாக ஒதுங்கியிருக்க அவரால் முடியவில்லை. தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வந்த அவர் நீரிழிவு நோயின் பாதிப்பால் 2013 இல் எம்மைவிட்டுப் பிரிந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக சிறிலங்கா சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்வேறு இயக்கங்களையும் சேர்ந்த சுமார் 5000 பேர் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

தோழர் றொபேட் சிறையிலிருந்து விடுதலையானபோது தம்மைத் தவிர வேறு எவரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை புலிகள் ஆயுதமுனையில் தடுத்திருந்தனர். அவ்வாறு தொடர்ந்து செயற்பட்டவர்களுக்கு குறைந்த பட்ச தண்டனையே மரண தண்டனையாக இருந்தது.

ஈபிஆர்எல்எவ் இயக்கத்தின் இராணுவ பிரிவுக்கு தலைவராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்த தோவா தோழர் என அழைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா தனி ஒரு அணியாக சென்னையில் முகாமிட்டு செயற்பட்டுக்கொண்டிருந்தார்.

இத்தகைய அசாதாரண சூழ்நிலையிலும் தோழர் றொபேட் இயக்க வேலைகளை தொடரும் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. தோழர் தேவா அவர்களை மீண்டும் ஒன்றிணைக்க அவர் எடுத்த முயற்சி அன்றிருந்த அக புற நிலைமைகள் காரணமாக கைகூடவில்லை.

இந்நிலையில் கட்சியாக பதிவு செய்யப்பட்டிருந்த ஈபிஆர்எல்எவ் இன் ஒரு சாதாரண உறுப்பினராக 1988 இல் மீண்டும் தனது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்தார். அன்று யாழ் மாவட்டத்தில் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்றிருந்த தோழர் இளங்கோவுடன் கட்சி வேலைகளில் நெருங்கி செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் தொடர்பாக, கட்சி தொடர்பாக, தோழர்கள் தொடர்பாக இருவரும் கொண்டிருந்த ஒத்த கருத்துக்களும், அணுகுமுறைகளும் தோற்றுவித்தன. இந்த நட்பும், தோழமையும், நெருக்கமும் தோழர் றெபேட் புலிகளால் படுகொலை செய்யப்படும் வரை தொடர்ந்தது.

தோழர் பத்மநாபா அவர்களின் மரணத்தின் பின்னர் கட்சி எதிர்கொண்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக் கின்ற ஒருவராக பிராந்திய எல்லைகளைக் கடந்து அனைத்து தோழர்களினதும் நம்பிக்கைக்குரிய ஒருவராக உயிர் அச்சுறுத் தல்கள் இருந்தபோதும் மக்கள் மத்தியில் இடையறாது செயற் படுகின்ற ஒருவராக தோழர் றொபேட் விளங்கினார்.


அவரது வேலைமுறை இலகுவான பணிகளை செய்துகொண்டு கடினமானவற்றை பிறரிடம் சுமத்திவிடுவதல்ல. எத்தகைய நெருக்கடி மிக்க வேளையிலும், எத்தகைய பிரச்சினைக்கும் முகங்கொடுக்க தோழர் றொபேட் பின்நிற்பதில்லை.

கட்சி அங்கத்தவர்கள் தமது நலன்களை கட்சியின் நலன்களுக்கு மக்களின் நலன்களுக்கு கீழ்ப்படுத்தி உழைக்க வேண்டும் என்பதை பிரசுரங்களில் படித்திருக்கிறோம். தோழர் றொபேட் அவ்விதம் நடைமுறையில் வாழ்ந்து காட்டினார்.

தோழர் றொபேட் அவரது உன்னத கருத்துக்கள், செயல்கள் வழியாக எம் மத்தியில் என்றென்றும் உயிர்வாழ்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஈ.பி.ஆர்.எல்.எவ்” அன்று துணிச்சலுடன் இறங்கியிராவிட்டால்



நூலை அண்மையில் வெளியிட்டிருக்கின்றீர்கள். அவ்வாறு தலைப்பிட்டமைக்கான காரணம் என்ன?

கடந்த 30 - 40 வருடங்களில் அதிகாரம்,- அரசியல்- சமூகம், பாரதூரமான அளவில் வன்முறை மயப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தவன்முறை சகஜமானது, இயல்பானது, என்ற சொரணையற்ற தன்மை பரவலான நிலைமை. இவை சாதாரணம் என்பது போல. தமிழர் சமூகத்தில் இந்த வன்முறை காட்டுமிராண்டி நிலையை எய்தியது. எனவே இங்கு சமூகத்தில் ஜனநாயக, மனித உரிமை விழுமியங்கள் தூக்கி நிறுத்தப்பட வேண்டியிருக்கிறது.

தமிழர்களில் ஒரு பல்லாயிரம் பேர் துரோகிகள் என்ற பெயரில் கொல்லப்பட்டது சரியே என்ற ஒரு போக்கு இன்று வரை ஆதிக்க கருத்தியலாக இருக்கிறது. இது தகர்க்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பேசுவதற்கு சௌகரியமான மனித உரிமை மீறல்கள் பற்றி, தமிழ் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் பேசுகிறார்கள்.

தெற்கிலும் அவ்வாறு தான். தத்தம் குறும், பெரும் தேசிய பெருமித உணர்வுகளை மற்றும் தீண்டாமையை மனித உரிமைக்கும் மனிதாபிமானத்துக்குமான அளவு கோல்களாக வைத்திருக்கிறார்கள். சுய விசாரணை எதுவும் கிடையாது.

அவ்வாறு சுய விசாரணை செய்யாத சமூகம் உருப்படுமா? அது கருதும் நியாயம், நீதி தான், கிட்டுமா. என்ற சந்தேகம் இருக்கிறது.

தமிழர் சமூகத்தில் நிலவும் தீண்டாமை பற்றியோ, சகோதரப் படுகொலைகள் பற்றியோ, அல்லது அண்மைய வரலாறு முழுவதும் நிகழ்ந்த பேரழிவுகள் பற்றியோ பேசாமல் குறிப்பிட்ட, தெரிவு செய்யப்பட்ட மனித உரிமை பற்றி பேசுவது.

நீதியான சிந்தனைஉள்ளவர்கள் பல ஆயிரக் கணக்கில் துரோகி நாமகரணத்துடன் எமது சமூகத்தில் உடல் மீதியின்றி அழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீசின் வாரிசுகள் அவர்கள். ஏன் எதற்கு என்ற கேள்வியை கேட்டதற்காகக் கொல்லப் பட்டவர்கள்.

அவர்களின் சரித்திரம் மண்ணோடு மண்ணாக முடியாது. அவர்களின் சரித்திரம் வரலாற்றின் தோள்களில் சுமந்து வரப்பட வேண்டும்.

ஏன், எதற்கு என்று கேள்வி கேட்கக் கூடாது என்றநிலை 30 ஆண்டுகளுக்கு மேல் ஏகஅதிகாரம் நிலவிய சமூகம் இது. இப்போதும் அந்தக் கருத்தியல் செல்வாக்குச் செலுத்துகிறது. எனவேதான் நெஞ்சில் ஈரம் உள்ளதலைமுறை தேவைப் படுகிறது. கழிவிரக்கம் அல்ல. மனிதனும் சோசலிசமும் என்றதனது கட்டுரையில் சே, புரட்சிவாதி மனித குலத்தின் மீதான பேரன்பினால் வழிநடத்தப்பட வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துவார்.

## இன்று மாகாணசபை முறைமை இருந்திராது

எதிர்கொள்வார்கள். கெட்டி தட்டிப் போன மரபார்ந்த அதிகார வர்க்கம் இதனை இலகுவில் அனுமதிக்காது. தமிழ் ஆயுதப் போராட்டம் பாசிச மாக சிதைவுற்றது ஒரு புறமிருக்க அந்தப் பழம் பெரும் மரபார்ந்த கனவான்களின் புதிய வாரிசுகள் யுத்தத்தின் பின், மக்களின் அங்கீகாரத்துடன் திரும்பவும் அதிகாரத்திற்கு வந்தார்கள். அந்த மரபார்ந்த தொடர்ச்சி நிலவுகிறது.

அர்ப்பண உணர்வு கொண்டவர்களின் காலம், கண நேர தற்காலிக வெற்றியும் நீண்டகாலப் போராட்டமும் துயரமுமாகத்தான் எமது சமூகங்களில் மாத்திரமல்ல, வேறு பலநாடுகளிலும் காணப்படுகிறது. மக்கள் இப்போது அந்த அரசியலில் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள்.

ஆனால், புதிய தலைமுறையின் எழுச்சி தொடர்வதற்கான சந்தர்ப்பம் உடனடியாகத் தெரியவில்லை. மக்கள் ஆங்காங்கே சுயாதீனமாகப் போராடுகிறார்கள். எண் ணிக்கை அளவில் நிகழும் இந்தமாற்றம் குணாம்ச ரீதியாக புதிய தலைமைத்துவம் நோக்கிய தலைமைத்துவ தேடலுக் கான வாய்ப்பான தருணமே. உடனடியாக இல்லாவிடினும் நீண்டகாலத்தில் அது சாத்தியமானது, நிஜமானது.

சில சந்தர்ப்பங்களில் சிறு பொறி பெருங் காட்டுத் தீயாக மாறலாம்

**தமிழர் போராட்ட வரலாற்றின் வலிகளை அதிகளவில் சுமந்தவர்களில் நீங்களும் ஒருவர். ஆனாலும், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு ஏறத்தாழ 8 வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும், ஏனையவர்களின் தியாகங்கள் எல்லாம் மறைக்கப்பட்டு அவர்கள் துரோகிகளாகவே பார்க்கப்படும் நிலை தொடர்கின்றதே?**

இந்த துரோகிகள் பட்டம் தமிழ் ஆதிக்க அரசியலினால் நீண்ட காலமாகக் கட்டமைக்கப்பட்டது. யாழ்மையவாத தீண் டாமை, பால் சமத்துவமின்மையின் எச்ச சொச்சங்களில் இது வேர்கொண்டது. ஆயுதம் ஏந்திய தமிழ் பாசிசம் அதனை விதியாகக் கட்டமைத்தது. தனது நலனுக்கு குறுக்கே வருபவர்களை எல்லாம் அது துரோகிகளாகச் சித்தரித்தது. உடல் மீதியின்றி அழித்தது. அந்த இரத்தம் தோய்ந்த ஆதிக்க கருத்தியல் சமூகம் முழுவதும் செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக தமிழ் ஊடகங்களில். உதாரணமாக தமிழர்களின் உள்ளக ஜனநாயக மீறல்களில் கொல்லப்பட்டவர்களின் உறவுகள் தமது பிள்ளைகள், உறவுகள் இவ்வாறு கொல்லப்பட்டார்க ள் என்று பொது வெளியில் கூற முடியாத நிலை. மனம் மறுகிப் போன நிலை, இன்றளவில் காணப்படுகிறது.

அவர்கள், தாம் அதனைப் பொது வெளியில் கூறக் கூடாதாக்கும் என்று கருதும் அளவிற்கு பொது வெளி பரோபகாரம் அற்றதாக இருக்கிறது. முஸ்லிம் மக்களுக்கு, எல்லைப்-புறங்களில் வாழ்ந்த சிங்கள மக்களுக்கு தமிழர் போராட்டத்தின் பேரில் இழைக்கப்பட்ட தீமைகள், கொடுமைகள் பற்றி நீடித்த பொருட்படுத்தப்படாத மௌனம்.

சிலர் பகிரங்கமாக பேசுகிறார்கள். ஆனால், பல்லாயிரக் கணக்கானோர் தமது கொல்லப்பட்ட காணாமற் போன உறவுகள் தொடர்பில் மௌனமாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சமூகத்தை நேசித்த பலர் தீண்டத்தகாதவர்கள், துரோகிகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது புதிய தலை முறைக்குத் தெரியாத சங்கதி.

இப்போது மெதுவாக இந்தக் கருத்தில் உடைப்பேற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனெனில் துரோகிகளாக்கப்பட்டவர்கள் தொகை பிரமாண்டமான அளவில் அதிகரித்திருக்கிறது.

**சிறுபான்மையினரின் ஆதரவுடன் உருவான அரசு, எதிர்க்கட்சித் தலைவர், குழுக்களின் பிரதித் தலைவர் என்ற பதவிகள் தமிழர்கள் வசமிருந்தபோதும், ஓரங் குல நிலத்தை விடுவிப்பதற்குக் கூட மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றார்களே?**

பொதுவாகவே தமிழர்களின் பிரதான அரசியல் என்பது தேசியவாத போதையை அன்றாட வாழ்வில் ஏற்றிக் கொண்டிருக்கும். மக்களின் ஜீவாதார நலன்கள் அதில் மூழ்கடிக்கப்படும்.

உலகில் சமூக அக்கறை கொண்ட தலைவர்கள் கல்வி வேலை வாய்ப்பை உருவாக்குவது வீடு சுகாதாரம் வறுமை ஒழிப்பு போன்ற விடயங்களில் அக்கறை செலுத்துவார்கள்.

ஆனால் தமிழ் ஆதிக்க அரசியல் சுயநிர்ணயம், தேசம், சமஷ்டி, ஜெனிவா, துரோகிகள், அரசியல்கைதிகள், காணாமல் போனோர், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற சொற்பதங்களுக்குள் புகுந்துகொண்டு, விபரீத சித்து விளையாட்டுக்களில் ஈடுபடும். இந்தச் சொற்களின் உண்மையான அர்த்தம், தாற்பரியம் பற்றி ஒரு பிரக்ஞையும் கிடையாது. விசுவாசமும் கிடையாது.

எல்லாப் பாதையும் ரோமுக்குத்தான் பாராளுமன்றம், மற்றும் மாகாண சபை

அங்கு இந்தச் சொற்களின் அர்த்தங்கள் எதுவும் இருக்காது. எல்லா சமரசங்களையும் விட்டுக் கொடுப்புக்களையும் தமது தனிப்பட்ட நலன்களுக்காகச் செய்து கொள்ளும். மக்கள் நலனுக்காக அல்ல.

மக்களின் ஜீவாதார நலன்கள் அதன் பிரக்ஞையில் உறைக் காது. இருக்காது. அவை சுவாரசியம் அற்றவை. ஆர்வம் ஊட்டுவன அல்ல. உதாரணமாக நிலம் சம்பந்தப்பட்ட அதிகாரம் மாகாண சபைக்கு இருக்கிறது. அதற்கான நியதிச் சட்டங்களை அவர்கள் உருவாக்கி மாகாண சபையில் நிறைவேற்ற வேண்டும்.

மத்தியில் இருந்து பிரச்சினைவரும்.வராதென்றில்லை. அவர்கள் அடுத்து நீதிமன்றம் செல்ல வேண்டும்.

உதாரணமாக முன்னாள் பிரதம நீதியரசர், இலங்கையில் இரண்டு சட்டவாக்க சபைகள் இருக்கிறதென்று சொன்னதால் தானே பிரச்சினை. ஆனால், அந்தத் தீர்ப்பு முக்கியமானது. இவ்வாறு 300க்கு மேற்பட்ட நியதிச் சட்டங்கள் இருக்கின் றன. அவை மாகாண சபையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இல்லாதவிடத்து ஏற்கனவே உள்ள பழைய சட்டங்கள் தான் செல்லுபடியாகும்.

ஏனோ அக்கறைப்படுகிறார்கள் இல்லை?

புதிய அரசு இவர்களின் அதரவுடன் தான் நிறுவப்பட்டது.

தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் தி. ஸ்ரீதரன் (சுகு) தினகரன் வாரமஞ்சரிக்காக வாசுகி சிவகுமாருக்கு வழங்கிய செவ்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் இல்லாவிட்டாலும் பல உருப்படியான காரியங்களைஆற்றியிருக்கலாம். ஆற்றவில்லை.

வரலாறு வெற்றிடங்களை விட்டுவைப்பதில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் காரியம் ஆற்றாதபோது. மக்கள் அந்த வெற்றிடத்தில் உறுதியாக இயங்குகிறார்கள் இப்போது அது தான் நடைபெறுகிறது.

மாகாண சபை உருவாக்கத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பங்கு முக்கியமானது. எனில் தற்போதைய வட மாகாண சபையின் செயற்பாடுகளை. அதன் செயற்பாடின்மையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

ஈ.பி.ஆர்.எல்.எவ். அன்று போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என்று சக கட்சிகளுடன் இறங்கியிரா விட்டால். இன்று வடக்கு கிழக்கில் மாகாண சபைமுறை இருந்திருக்குமா என்பது சந்தேகமே. அன்று ஒரு புறம் புலிகளும் மறுபுறம் பிரேமதாச அரசும் மாகாண சபை முறையை முடக்குவதற்கான முழு மூச்சான சதி நாச வேலைகளில் ஈடுபட்டிருந்தவேளை. மாகாண சபை உறுப்பினர்கள். அரச ஊழியர்கள் உயிரை துச்சமென மதித்து அர்ப்பண உணர்வுடன் பணியாற்றினர். தவறுகள் நேரவில்லை என்றில்லை. நிறைய தவறுகள் நேர்ந்தன... அவற்றுக்கும் மத்தியில் பல்லினபாங்கான மந்திரிசபை அமைக்கப்பட்டது.



## திருநாவுக்கரசு ஸ்ரீதரன் (சுகு)
### தலைவர், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

தென்னிலங்கையில் கிளர்ச்சி தீவிரமடைந்த நிலையில் பலரும் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் முற்போக்கான சமூக செயற்பாட்டளர்கள் பலர் திருமலையில் தஞ்சம் அடைந்திருத்தனர்.

இத்தனைக்கும் மத்தியில். திருமலையை நவீன நகரமாக்கு வதற்கும். பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கரையோரப் பாதை மற்றும் புகையிரதப் பாதை ஒன்றை நிறுவுவதற்கும் யாழ்ப்பாணத்தில் மென்பொருள் உற்பத் தியைத் தொடங்குவதற்கும் இந்திய அனுசரணையுடன் முயற்சிக்கப்பட்டது.

மீன்பிடித் துறைமுகங்களை மறுநிர்மாணம் செய்வது. விவசாய ஆராய்ச்சி நிலையங்களை வடக்கு கிழக்கில் பரவலாக நிறுவுவது. பல்லின சமூகங்களை பிரதிபலிப்பதாக அமைச்சரவையை அமைப்பது. மாகாண அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சியில் இருந்த முஸ்லிம் காங்கிரசிற்குமிடையே சுமுகமான உறவு நிலை காணப்பட்டது. மாகாண சபை என்ற கருத்துருவை கட்டுமானத்தை நிறுவுவதில் பல்வேறு விமர்சனங்கள். குறைபாடுகள் காணப்பட்டாலும். மாகாணத் திற்கான சட்டம் ஒழுங்கு முறை ஒன்று நிறுவப்பட்டது. ஒன்றும் சுமுகமாக நிகழவில்லை. பல்வேறு கெடுபிடிகள் பிக்கல் பிடுங்கல்களுடன் தான் நிகழ்ந்தது. பெருமளவு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டியது.

குறிப்பாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதில் மாகாண சபை அக்காலகட்ட நிலைமையில் வினைத் திறனுடன் செயற்பட்டது.

பாரம்பரிய நிலங்களை பாதுகாப்பதிலும். மக்களின் மீள் குடியேற்றத்திலும். தனது ஆற்றலை வெளிப்படுத்தியது.

ஆனால். கெடுபிடிகள் எதுவும் இல்லாத காலத்தில் தங்களின் தயவிலேயே புதிய மத்திய அரசு 2015 இல் உருவாகியிருக்கும் நிலையிலும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் வினைத்திறனுடன் செயற்பட வாய்ப்புக்கள் காணப் படுகின்றன.

மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் தொடர்பிலான 300க்கு மேற்பட்ட நியதிச் சட்டங்களை இப்போது ஆக்கி முடித்திருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக அது அவ்வாறு நிகழவில்லை.

பெருந்தொகையான சட்ட அறிஞர்களையும் கல்வியாளர் களையும் ஈடுபடுத்தவாய்ப்பிருந்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் நீண்டதூரம் போகவில்லை.

இருக்கும் அதிகாரங்கள் வளங்களைவைத்து ஆற்றக் கூடிய காரியங்கள் ஏராளம்.

கல்வி. சுகாதாரம். போக்குவரத்து. பாதை. சுற்றாடல். நிலம். சட்டம் -ஒழுங்கு என ஏராளம் வாய்ப்புக்கள். ஆனால். சம்பந்தமில்லாத விடயங்களை கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி நாட்டதில் கொள்ளாத நிலை தான் தொடர்கிறது.

ஆனால். வடமாகாண சபை அப்படி ஆகி இருக்கிறது. கிழக்கு மகாண சபையின் தாக்கமான செயற்பாடுகள் எதுவும் வெளிவரவில்லை.

சுதந்திரத்திற்கு பிந்திய இலங்கையில் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பிராந்தியங்களுடன் பகிர்ந்து கொள்ளும் முக்கிய ஜனநாயகமாற்றம் இந்த மாகாண சபை. அதற்கு அதிகாரங்களை நிலைநாட்டுவது பெறுவது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கடமை. அந்தக் கடமை செவ் வனே செய்யப்பட வேண்டும்.

பாராளுமன்றம் தவிர்ந்த சட்டவாக்க சபை அது. ஒரே நாளில் ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் செய்யமுடியும் என்றில்லை.

அதற்கு ஒளி படைத்தகண்களும் உறுதி கொண்ட நெஞ்சும் வேண்டும்.

மாகாணசபைகள் செயற்படுவதற்கு கட்சி காழ்ப்புணர்வுகளுக் கப்பால் பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்

அதற்கான ஜனநாயக இடைவெளி வேண்டும். மாகாண சபையை வழி நடத்துபவர்கள் மக்களை நிர்வகிப்பவர்களாக இருக்க வேண்டும். மத்திய அரசு. அண்டைநாடு. 1.5 மில்லியன் புலம்பெயர் மக்கள். சர்வதேச சமூகம் என வளங் களைக் கொண்ட எமது வடக்கு கிழக்கு மாகாண சபை களுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

சாதுரியத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் நடந்து கொண்டால் சாதிக்க முடியும்.

**அரசியலில் நீங்கள் தீவிரமாக ஈடுபட வேண்டியதன் அவசியம் பலராலும் வலியுறுத்தப்படுகின்றதே?**

வரலாறு தனி மனிதர்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. தனி மனிதர்களுக்கான வரலாற்றுப் பாத்திரங்கள் இருக்கின்றன. அவை வரையறைக் குட்பட்டவை. சமூக ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான இடைவெளியை உருவாக்க வேண்டும்.

அனுபவங்கள் பெரிதாக இருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமைகாணும் பக்குவம் உருவாக வேண்டும். புதிய தலைமுறையுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே தற்போதைய எனது பிரதான முயற்சி.

# சட்டவிரோத மணல் அகழ்வை தடு நியாயவிலையில் மணலை வழங்கு




வீட்டுத்திட்டம் உள்ளிட்ட மக்களின் அவசியத் தேவைகளுக்கு நியாயமான விலையில் மணல் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி சமத்தும் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலயகம் முன்பாக 12.01.2017 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தருவதோ ஐந்தரை இலட்சம். மணலுக்கோ இரண்டு இலட்சம். சட்டவிரோத மணல் அகழ்வை தடு. நியாய விலையில் மணலை வழங்கு. மணலுக்கு இலஞ்சமா எங்களுக்கு வஞ்சமா ?. உள்ளூர் வளம் உள்ளூர் மக்களுக்கே முன்னுரிமை போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய நாம் எங்களுடைய கட்டுமானத் தேவைகளுக்கான மணலைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாகக் கரைச்சிப் பிரதேச மக்கள் மணலைப் பெறுவதற்காகப் பெரும் சிரமப் படுகின்றனர். இந்த நிலைமை கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக நீடிக்கிறது. இதனால் கறுப்புச் சந்தைகளிலிருந்து மிக உயர்ந்த விலையைக் கொடுத்தே மக்கள் மணலை வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையானது சட்டவிரோத மணல் அகழ்வை ஊக்கப் படுத்துவதோடு மக்களையும் தவறான வழிமுறைக்குக் கொண்டு செல்கிறது. அத்துடன் மக்களுக்கு அதிக பணச் செலவையும் ஏற்படுத்துகிறது. இதனால் வீட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 35 வீதமான பணத்தை மணலுக்கு மட்டும் செலவழிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக வீட்டுத்திட்டத்தை முழுமைப்படுத்த முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்படுவதுடன் அவர்களைக் கடனாளி களாகவும் மாற்றுகிறது. இதேவேளை இந்த மாவட்டத் திலிருந்து வெளிமாவட்டத்துக்கான மணல் தாராளமாக எடுத்துச் செல்லப்படுவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

எமது வளத்தை நாம் இழந்து கொண்டிருக்கிறோமே தவிர எமது நியாயமான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படவில்லை. இது குறித்து பல தடவை பல்வேறு தரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டபோதும் எந்த விதமான தீர்வுகளும் காணப்பட வில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த விவகாரம் பேசப்பட்டபோதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள ளப்பட்டு மக்களுடைய நியாயமான தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை. எனவேதான் இந்தப் பிரச்சினை தீர்க்கப் படாமல் நீடித்துக் கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டி எமது கண்டனத்தைத் தெரியப்படுத்துவதோடு.

கிளிநொச்சி மாவட்ட மக்களுடைய கட்டுமானத் தேவைகளுக் குரிய மணலை நியாய விலையில் கிடைப்பதற்கான வழி வகையைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கே முன்வைக்கிறோம்.

அக்கராயன்குளம். புலோப்பளை. கிளாலி உள்ளிட்ட பல பிரதேசங்களில் இருந்து நாளதந்தம் சட்டவிரோதமாக மணல் வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. எனவே அவற்றையும் தடுத்து நிறுத்தி

மிகக் குறுகிய கால இடைவெளியில் மக்களுக்கு நியாய விலையில் மணல் கிடைப்பதற்கான நிர்வாகப் பொறி முறையை உருவாக்கி அமுல்படுத்த வேண்டும் என்பதையும் இங்கே வலியுறுத்துகிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகிகள் தினச் சிந்தனை

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பல்லாயிரக் கணக்கான மக்களையும் போராளிகளையும் எம் தோழர்களையும் இழந்து நாம் பெற்றதென்ன?

இந்த கேள்வியை நாம் சாதாரணமாக கடந்து செல்கிறோம். இந்த உயிரிழப்பு தியாகம் சர்வ சாதாரணமானதா? ஆனால், இவைபற்றிய பிரக்ஞை எதுவுமற்றுத்தான் இன்று காரியங்கள் நிகழ்கின்றன.

யுத்தம் முடிந்து 7 ஆண்டுகளுக்குள் எல்லாம் மறக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் சக சமூகங்களுடன் சமத்துவமாக வாழவேண்டும், சகலவிதமான சமூக அநீதிகளும் தகர்க்கப்பட வேண்டும் என்பதே போராட்டத்தின் சாரம்சமாக இருந்தது.

ஆனால்,

- போராட்டம்- யுத்தத்திற்கு பிந்திய சூழலில் 7 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தத் தியாகங்கள் கருத்திற்கு எடுப்பட்டிருக்கின்றனவா? அநியாய இழப்புக்களின் கனதி உணரப்பட்டிருக்கிறதா??
- போராடியவர்கள் இழப்புகளை சந்தித்தவர்கள் குறைந்த பட்சமாவது கண்ணியமான வாழ்வைப் பெற்றிருக்கிறார்களா???
- போராட்டத்தில் பங்குபற்றிய பெண்களின் நிலை என்ன ?
- சமூக அநீதிகள் தொடர்பான விழிப்புணர்வு எதுவும் சமூகத்தில் நிலவுகிறதா?
- சமூகங்களிடையே நல்லெண்ணத்திற்கான காத்திரமான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா?
- பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் சமூக பாதுகாப்பு நிலை என்னமாதிரி இருக்கிறது??
- தமிழர்களுக்கும் சக சமூகங்களுக்கும் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஒரு படி தன்னும் முன்னோக்கிச் சென்றிருக்கிறோமா ???

**நிலத்துக்காகவும்,**

**காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகவும்,**

**சிறையிலிருப்பவர்களின் விடுதலைக்காகவும்,**

**வேலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்காகவும்**

மக்கள் இளைஞர்கள்- பெண்கள் நூறு நாட்கள் கடந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் அதற்கான ஜனநாயக சூழல் நிலவுவது முன்னேற்றமே!

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவது இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுவது

அதிகாரப்பகிர்ந்தளிப்பு

குடிநீர்- வறுமை வரட்சி -

சமூக பொதுளாதார அபிவிருத்தி -சமூக பாதுகாப்பு

வீதியில் இறங்கி போராடும் மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை தருவது தமிழர் தலைமைத்துவத்தின் பிரதான கடமையாக இருக்க வேண்டாமா? ஆனால் என்ன நிகழ்கிறது. கன்னை பிரிந்து "குடுமி பிடிச்சண்டை"

இவ்வளவு பேரழிவும் தியாகமும் நிகழ்ந்த சமூகத்தில் யுத்தத்தின் பின்னமைந்த வட மாகாண சபையின் நிகழ்ச்சி நிரல் 3 வருடம் கழித்து ஊழல் துஸ்பிரயோகத்தை சுமந்து நிற்பது சமூக அக்கறை கொண்டோருக்கு விசனத்தையும் வெறுப்பையும் கவலையையும் ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது.

நம்பி தெரிவு செய்த மக்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கு, வடக்கு மாகாண சபைகள் சர்வதேச கரிசனைக்குரியவை

அவர்களின் பார்வையில் கோமாளிக் கூத்து- கையாலாகாத களமாக வடமாகாண சபை மாறியிருக்கிறது.

தியாகங்களால் பெறுமதி சேர்க்கப்பட்ட தமிழர் விடயங்கள் "நலங்கெட புழுதியில்" எறியப்பட்டது போன்ற அவல நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பல்லாயிரம் மக்களும் போராளிகளும் பொதுமக்களும் தியாகம் செய்து உருவான பலா பலன்கள் பாதுகாக்கப்படுவதும்

பேரழிவைச் சந்தித்த இந்த சமூகத்திற்கு பயனுடையதாக மாற்றுவதுமே நாம் உயிரிழந்தவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

சிந்தித்துப் பாருங்கள் எழிலார்ந்த கனவுகளுடன் உயிர்த்தியாகம் செய்தவர்களை நாம் மீண்டும் மீண்டும் கொல்லவில்லையா என்று.

இவ்வளவு பெரிய தியாகங்கள் நடந்த மண்ணில் நாங்கள் ஒன்றும் பெரிய விம்பங்கள் அல்ல.

முகம் தெரியாமல் பல்லாயிரம் பேர் மரணித்த மண்ணில் கன்னை பிரித்து போலி கடவுளர்- கதாநாயக விம்பங்களை உருவாக்குவது சற்று எரிச்சலாக இருக்கிறது.

இந்த போலி கதாநாயக வழிபாடு அல்ல. அதில் புழகாகிதம் அல்ல. துன்புறும் மக்களுக்கு அர்ப்பணிப்பதே இன்று பிரதான பணி.

எமது மக்களும் கண்மூடித்தனமான வழிபாடுகளைத்தவிர்த்து பகுத்தறிவின் பாற்பட்டு செயற்பட வேண்டும்.

குறுகிய அற்ப தனிப்பட்ட ஆட்களின் அரசியல் நலன்களுக்காக பெருவாரியான மக்களின் நலன்கள் அடகு வைக்கப்படும் அவலம் வேண்டாம்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு மக்களுக்காக ஆக்க பூர்வமாகச் செயற்பட முனைவோம்.

இந்த 27 வது தியாகிகள் தினத்தில் எமது வேண்டுதல் இதுவே.

சுகு-ஸ்ரீதரன்
தமிழர் சமூக ஜனநாயக கட்சி

## சந்ததியை ஊனப்படுத்தும் பிளாஸ்டிக்



யாழ்.குடாநாடு முழுவதும் பிளாஸ்டிக் மேடுகளாகிக் கொண்டிருக்கின்றது. சுற்றுச்சூழல் பற்றிய எந்தவித விழிப்புணர்வோ பொறுப்போ அற்று சர்வ சாதாரணமாக வீசியெறியப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் நகரத்தையே ஆக்கிரமித்துக் கிடக்கிறது. நமக்கென்ன என்று இது சாதாரணமாகக் கடந்துசெல்லும் காரியமல்ல.

குறிப்பாக, நாவாந்துறை வடகரையான குடாக்கரையிலிருந்து தெற்கு நோக்கி வில்லூன்றி முனை தொடக்கம், அதிலிருந்து கிழக்காக கொட்டடியிலிருந்து குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை வரை கரையோரங்களில் நிறைந்தும், குவிந்தும் காணப்படுகின்றது.

நகரத்திலிருந்து தெற்காக கடலை நோக்கி வரும் ஐந்து கழிவுநீர் வாய்க்கால்கள் வழியாக இந்தப் பிளாஸ்டிக் கழிவுகள் மேற்படி கரைகளை வந்தடைகின்றன.

பிரதானமாக அதிகமான பிளாஸ்டிக் கழிவுகள் குருநகர் வாடியடியிலிருந்து கிழக்குக் கரை நீளம் கொய்யாத்தோட்டம் சந்தி வந்தேறும் கரை வரை மிக அதிகளவான நச்சுக் கழிவுகள் குவிந்து காணப் படுகின்றன.

எக்காலத்திலும் இவை அகற்ற முயற்சி எடுக்கப் பட்டதற்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை.

குருநகரை எடுத்துக் கொண்டால் இந்தக் கழிவுகள் அடைத்துக் குவிந்து கிடக்கும் கரையோரத்துக்கும் குடியிருப்புகளுக்கும் இடையிலுள்ள தூரம் 5இலிருந்து 10மீற்றர் இடைவெளிதான். இந்த நச்சுக் கழிவுகளிலிருந்து வெளியேறும் மாசடைந்த காற்றையே மக்கள் நேரடியாகச் சுவாசிக்கிறார்கள்.

வெய்யில் வெப்பம் உவர்நீரைச் சூடாக்கும்போது அதிலிருந்து வேகும் பிளாஸ்டிக் கழிவுகளின் நச்சுத் தன்மை அழுகிய கடற்பாசிகளுடன் கலந்து காற்றை மாசடையச் செய்வதோடு, இதை சுவாசிக்கும் குழந்தைகளையும், கர்ப்பிணிப் பெண்களையும் அதிகம் பாதிக்கும். இதனால் பிறக்கப்போகும் குழந்தைகள் ஊனமாகப் பிறப்பதற்கான சாத்தியங்களும், காரணிகளும் மிக அதிகம்.

இப்போ வேண்டுமானாலும் நீங்கள் யாரும் சென்று குருநகர் பகுதியில் இந்த கவனிக்கப்படாத விஷக் கழிவுகளைக் காணலாம்.

தமிழ்மக்கள்மீது அரசுக்கு அக்கறையில்லாமல் இருப்பதில் எந்தவித அதிசயமும் இல்லை. தமிழ் அரசியல்வாதிகளுக்கு இவற்றைக் கவனத்தில் எடுக்க துளியளவும் நேரம் இல்லை. அவர்கள் வேறு பிரதான காரியங்களில் படுபிஸி. ஆனால்,

ஆமைகளைப் பாதுகாக்கும் சுத்த பவுத்த அரசுக்கு இது கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்.

கடலில் கலக்கும் இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளால் அதிகளவில் கடலாமைகள் பாதிப்புக்கு உள்ளாகி வகை தொகையின்றி இறந்து விடுகின்றன. இது நான் சொல்லவில்லை கடல்வள உயிரியல் ஆய்வு நிறுவனங்கள் சொல்லியிருக்கின்றன. ஆக, மக்களைக் காப்பாற்ற வகையில்லையாயினும், கடலாமை களையாவது காப்பாற்றும் பொருட்டு இந்த நச்சுக் கழிவுகளை அகற்றி அழித்து அரசு தனது கடமையைச் செய்ய முன்வர வேண்டும்.

இந்தப் பிளாஸ்டிக் கழிவுகளை வீசி எறிந்து நிலத்தையும், கடலையும், காற்றையும் மாசு படுத்தாமல், அவற்றைச் சேகரிக்கும் திட்டத்தை அமுல்படுத்தி, மறுஉற்பத்திக்கு பயன் படுத்துவது பற்றி ஏன் இன்னமும் அரசு யோசிக்கவில்லை என்பது விளங்கவேயில்லை. இதில் அதிக வருமானமும் உண்டல்லவா?! ஒரு கல்லில் பல மாங்காய்கள்.

சுருக்கமான உதாரணங்களுக்கு கீழேயுள்ள இணைப்புக்களையும் சிரமம் பாராது பாருங்கள் தோழர்களே!

https://www.youtube.com/watch?v=YFZS3Vh4lfI
https://www.youtube.com/watch?v=_6xlNyWPpB8
https://www.youtube.com/watch?v=HQTUWK7

**அண்மையில் நோர்வேயிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த தமயந்தியின் பதிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகிகள் தினம்

**தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் சமூகத்தில் ஜனநாயகத்திற்காகவும், உழைக்கும் மக்களின் விடிவிற்காகவும் தம் உயிரை அர்ப்பணித்த தோழர்கள், சக இயக்கப் போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூரும் தினம்**



விஜயஅன்னலட்சுமி – மாவிட்டபுரம் | றூபி அன்ரி – நவாலி | திருமதி செல்வம் – மயிலிட்டி | தோழர் சோபா – யாழ்ப்பாணம் | தோழர் பானு – அடம்பன் | தோழர் சாந்தி – திருகோணமலை | தோழர் வசந்தி – காங்கேசன்துறை

ஆயுதந் தாங்கியும் ஆயுதந் தாங்கியவர்களை ஆதரித்துப் பாதுகாத்தும் எம்முடன் பயணித்த பெண்கள் இவர்கள். நவாலியை சேர்ந்த றூபி அன்ரி புழல் இலங்கை தமிழர் அகதி முகாமில் இயற்கை மரணமெய்தினார். தோழர்கள் சோபா, பானு இருவரும் அரச படைகளுடனான மோதலில் உயிரிழந்தார்கள். வாணி அம்மா என தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்ட விஜய அன்னலட்சுமி புலிகளால் காணாமல் போகச் செய்யப்பட்டார். தோழர் செல்வத்தின் மனைவி என்ற ஒரே காரணத்திற்காக மயிலிட்டியை சேர்ந்த வெள்ளையம்மா புலிகளின் பலத்த சித்திரவதைகளுக்கு பின் கொல்லப்பட்டார். தோழர் சாந்தி – திருகோணமலை, தோழர் வசந்தி – காங்கேசன்துறை இருவரும் புலிகளின் துப்பாக்கிகளுக்கு இரையாகிப் போனார்கள். தமிழர் போராட்டத்தில் பங்குகொண்டதை தவிர வேறெந்த குற்றத்தையும் இவர்கள் இழைக்கவில்லை.



தோழர் சிறில் | குணசேன மஹாநாம | உபாலி குரே

தென்னிலங்கையை சேர்ந்த தோழர் சிறில் தனது அரசாங்க வேலையை கைவிட்டு எம்மோடு போராட்டத்தில் பங்கேற்றவர். 1988 இல் எமது அரசியல் நடவடிக்கைகளை தொடர கொழும்பில் பேருதவியாக இருந்தவர் மகாநாமா. உபாலி குரே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கருத்து ரீதியாகவும், அரசியல் நடவடிக்கைகளிலும் எமக்குப் பக்கபலமாயிருந்தவர்.



தோழர் கணேஷ் | தோழர் சம்பத் | டாக்டர் குழைக்காதர்

ஸ்டாலின் அண்ணனின் வழிகாட்டலில் தமிழகத்தில் எமது அரசியல் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாய் இருந்தவர்கள். ஆயுதப் பயிற்சி பெறச் சென்ற தோழர்களின் அத்தனை தேவைகளையும் கவனிப்பதிலும் தமிழக மக்கள் மத்தியில் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவை திரட்டுவதற்கும் பாரிய பங்களிப்பை வழங்கியவர்கள். டாக்டர் குழைக்காதர் 1990 இல் இடம்பெயர்ந்து தமிழகம் சென்ற எமது தோழர்கள், ஆதரவாளர்களின் பிரச்சினைகள், தேவைகளை கவனிப்பது வரை உடனிருந்து செயற்பட்டவர்.

மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் முகங்கொடுத்த பிரச்சினைகளை எதிர்கொண்டு ஆயுதந் தாங்கிய இயக்கத்திற்காகவும், ஆயுதங்களை கைவிட்ட கட்சிக்காவும் உழைத்த முத்தவர்கள்



சுந்தரம் ஐயா – காங்கேசன்துறை | பாய்வா மாஸ்டர் – திருகோணமலை | அந்தோனிப்பிள்ளை – குருநகர் | துரையர் – கன்னியா | தனபாலரட்ணம் – திருநெல்வேலி | சின்னத்துரை – அரியாலை | சிவராசா மாமா – பலாலி | முத்துக்குமாரு – மறவன்புலோ | சண்முகநாதன் – கல்லாறு



தோழர் ராசிக் – நெல்லியடி | தோழர் சாமி – இடைக்காடு | தோழர் வரதன் – கன்னியா | தோழர் காந்தி – மயிலிட்டி | தோழர் கௌரிசன் – கிளிநொச்சி | தோழர் கடாபி – முல்லைத்தீவு | தோழர் சந்திரன் – மயிலிட்டி | தங்கமகேந்திரன் – திருகோணமலை



தோழர் ராஜன் – பலாலி | தோழர் வரோதயன் – திருகோணமலை | தோழர் அகிலன் – கிளிநொச்சி | தோழர் வீரமைந்தன் – பலாலி | தோழர் ஜோன்சன் – குருநகர் | தோழர் வில்லியம் – சாவகச்சேரி | தோழர் சிவாஜி – குருநகர் | தோழர் சின்னவன் – கிளிநொச்சி | தோழர் சுகந்தன் – கிளிநொச்சி | தோழர் கிருபா – குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்நியர் தமது தொழில்களோடு போட்டியிடுவதால் வருமானம் குறைந்து தமது வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் நம்புகின்றனர். இதனால் அவர்களில் பலரும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதை ஆதரிக்கின்றனர். இப் பின்னணியில் எதிர்வரும் யூன் 8ம் திகதிய தேர்தல் முக்கியத்துவம் பெறுகிறது. இரண்டு பிரதான கட்சிகளும் பிரிந்து செல்வதை ஆதரிக்கின்றன. அவ்வாறானால் மக்கள் யாருக்கு வாக்களிப்பது? இதற்கான பதில்களே தேர்தலின் முடிவைத் தீர்மானிக்கும்**

# பிரித்தானிய தமிழர்களின் தெரிவு






**அன்பார்ந்த வாசகர்களே.**

பிரித்தானியாவில் தற்போது வசந்த காலம். மரங்கள் யாவும் அழகாக துளிர்த்து, பச்சைப் பசேலென இலைகளை விரித்து தென்றல் காற்றில் ஊஞ்சல் ஆடும். இங்கு ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த பட்சம் எமது தாயகத்து வீட்டு முற்றங்கள் அளவுக்காவது சிறிய தோட்டங்கள் வீட்டிற்கு முன்னால் அல்லது பின்னால் இருக்கும். அனைவரும் தத்தமது வார விடுமுறைகளில் அழகான, வெவ்வேறு மலர் இனங்கள் உள்ள செடிகளை நாட்டுவார்கள். ஒரு சில வாரங்களில் இவை மிக ரம்மியமான பல்வேறு வர்ணங்களைக் கொட்டும். மலர்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்திருக்கும். இம் மலர்த் தோட்டங்கள் வீடுகளில் மட்டுமல்ல, அவை தெரு ஓரங்களை நந்தவனமாக அலங்கரிக்கும் வகையில் சிறு சிறு தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும்.

முதுவேனில் காலத்தில் மிகவும் தடிப்பான ஆடைகளை அணிந்த மக்கள் வசந்த காலமாகியதும் மிகவும் அழகான, வண்ண வண்ண நிறங்களிலான பார்வைக்குப் பரவசத்தைத் தரும் விதத்தில் மெல்லிய துணியிலான ஆடைகளை அணிந்து நடமாடுவார்கள். லண்டன் மாநகரம் உலகின் பல்வேறு கலாச்சாரங்கள், பண்பாடுகள் சங்கமித்து வாழும் பன்மைத்துவ அடையாளங்களின் உல்லாசபுரியாகும். வசந்தகாலமானதும் நந்தவனத்தில் பல்வேறு நறு மலர்கள் காட்சியளிப்பது போல, உலக கலாச்சாரங்களின் உன்னதமான அழகினை, ரம்மியத்தை பல்வேறு கலாச்சாரங்களை அவர்கள் உடுத்தியுள்ள ஆடைகள் வெளிப்படுத்தும். மனித வர்க்கத்தின் ஒருமைப்பாட்டினை, சக வாழ்வினை, பல்வேறு கலாச்சாரங்களின் அழகியலை மெய் மறந்து ரசிக்க முடியும்.

இம் மாதிரியான கால வேளையில்தான் தேர்தலையும் இங்கு நடத்துவார்கள். பொதுவாகவே இங்கு நடைபெறும் தேர்தல்களில் வாக்களிப்போரில் 50 சதவீதத்திற்கு அதிகமானோர் ஓய்வு ஊதியம் பெறும் முதியவர்களாகும். இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு மிகவும் குறைந்த தொகையினராகும். அமையும் அரசுகள் இளம் தலைமுறையினரைத் தண்டிப்பதாகவும், அவர்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதில்லை எனவும் அவர்கள் கருதுவதால் 'ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன' என எண்ணி வாக்களிப்பில் அதிகளவில் கலந்து கொள்வதில்லை. இதனால் ஆளும் கட்சிகள் ஓய்வூதியத்தில் வாழ்பவர்களை இலக்கு வைத்தே ஏதாவது சலுகைகளை அறிவித்து வாக்குகளைக் கொள்ளையடிப்பார்கள்.

**வாசகர்களே!**

எனது கடந்த கடிதத்தில் பிரித்தானிய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தெரிவித்திருந்தேன். பிரித்தானிய ஆளும் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது குறித்து மக்கள் வாக்கெடுப்பை நடத்தியபோது 52 சதவீத மக்கள் ஆதரித்து வாக்களித்தார்கள். இவ் வாக்கெடுப்பை அறிவித்த முன்னாள் பிரதமர் டேவிட் கமரோன் ஒன்றியத்தில் இணைந்திருப்பதை ஆதரித்த போதிலும் மக்கள் எதிராக வாக்களித்தமையால் பதவியில் இருந்து விலகியது மட்டுமல்லாமல் அரசியலிலிருந்தும் விலகினார். இதன் காரணமாக ஆளும் கட்சி புதிய பிரதமராக திரேசா மே எனும் பெண்மணியை தெரிவு செய்தார்கள். வாக்கெடுப்பு சமயத்தில் இவர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதற்கு ஆதரவாக இருந்த போதிலும், வாக்கெடுப்பிற்குப் பின்னர் மக்களின் தீர்ப்பை அமுல்படுத்தப் போவதாகக் கூறி தற்போது வெளியேறும் முடிவின் தீவிர ஆதரவாளராக உள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா முழுமையாக வெளியேறும் அதே வேளை பாதுகாப்பு, வர்த்தகம், பயங்கரவாத தடை போன்றவற்றில் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளப் போவதாக கூறுகிறார்.

இத் தேர்தல் சமயத்தில் பிரித்தானியாவின் இன்னொரு நகரான மான்செஸ்டரில் இசை நிகழ்ச்சி ஒன்றில் தற்கொலைக் குண்டு வெடித்ததால் 22 பேர் மரணமடைந்தார்கள். தற்கொலைக் குண்டுதாரி பிரித்தானிய முஸ்லீம் இளைஞர் என பொலீசார் தெரிவித்துள்ளதால் இம் மாதம் (யூன்) 8ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் இனவாத அரசியல் அதிகம் காணப்படுகிறது. பிரித்தானியாவில் குடியேறியுள்ள ஐரோப்பியர்களை, ஐரோப்பாவிற்கு வெளியில் இருந்து வந்தவர்களை திருப்பி அனுப்புவது என்பது மிகவும் சூடான விவாதமாக உள்ளது. இங்கு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது என்பதற்கு பல்வேறு பொருளாதாரக் காரணிகளைக் கூறிய போதிலும், அடிப்படையில் இனவாதமே அரசியல் போக்கைத் தீர்மானிக்கிறது.

இங்கு காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, சம்பளக் குறைப்பு, குற்றச் செயல்கள் அதிகரிப்பிற்குக் காரணம் கட்டுப்பாடற்ற விதத்தில் ஐரோப்பியர்களை அனுமதித்தமையே என தீவிர வலதுசாரி சக்திகள் கூறுகின்றன. இந்த நாட்டில் காணப்படும் அதிகளவு வேலை வாய்ப்புகள் பல பிரித்தானிய மக்களால் கௌரவக் குறைவு அல்லது சம்பளப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் விரும்பப்படாத தொழில்களாகும். உதாரணமாக கட்டிட வேலை, தெருச் சுத்தம், பெருவீதிகளை அமைத்தலுக்குத் தேவையான கூலியாட்கள், வைத்தியசாலைகளில், பராமரிப்பு நிலையங்களில் தேவைப்படும் தாதி மற்றும் சிறு தொழில்கள், விவசாய மற்றும் பழம் பறித்தல் போன்றனவாகும். குறைந்த சம்பளத்திற்கு அந்நியர்கள் தயாராக இருப்பதால் அதிக லாபங்களை நோக்கிய முதலாளிகள் அவர்களுக்குத் தொழில்களை வழங்குவதால் பிரித்தானியர்களின் சம்பளங்கள் தொழில் போட்டி அழுத்தங்களின் காரணமாக குறைகின்றன. அரசாங்கமும் பொது வசதிகளுக்கான செலவினங்களைக் குறைத்துள்ளதால் உதாரணமாக கல்வி, சுகாதாரம், போக்குவரத்துச் செலவினங்களைக் குறைத்துள்ளதால் ஐரோப்பியர்களின் அதிகரித்த வருகை பல பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளது. பாடசாலைகளில், வைத்தியசாலைகளில், பராமரிப்பில் இட நெருக்கடி அதிகரிக்க அவற்றால் சாமான்ய பிரித்தானிய பிரஜை பாதிக்கப்பட, இவற்றினால் எழுந்துள்ள மக்களின் விரக்தியை இதற்கெல்லாம் காரணம் கட்டுப்பாடற்ற விதத்தில் வரும் ஐரோப்பியர்களே என மக்கள் கவனத்தை இனவாத சகதிக்குள் தீவிரவாத வலதுசாரி சக்திகள் தள்ளியுள்ளனர். இதன் விளைவாக ஏற்பட்டு வரும் வெறுப்புணர்வுகளால் நிறம், மதம், கலாச்சாரம் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகளை பிரித்தானிய கலாச்சாரத்திற்குப் புறம்பானவை எனக் கூறி இனவாத அரசியலை மறைமுகமாக புகுத்துகின்றனர். குறிப்பாக முஸ்லீம் பெண்கள் பர்தா அணிவதை பாதுகாப்பிற்கு ஆபத்தானது எனக் கூறி அம் மக்களின் கலாச்சாரங்களை இழிவுபடுத்துகின்றனர். இதனால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்நியர் தமது தொழில்களோடு போட்டியிடுவதால் வருமானம் குறைந்து தமது வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் நம்புகின்றனர். இதனால் அவர்களில் பலரும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதை ஆதரிக்கின்றனர். இப் பின்னணியில் எதிர்வரும் யூன் 8ம் திகதிய தேர்தல் முக்கியத்துவம் பெறுகிறது. இரண்டு பிரதான கட்சிகளும் பிரிந்து செல்வதை ஆதரிக்கின்றன. அவ்வாறானால் மக்கள் யாருக்கு வாக்களிப்பது? இதற்கான பதில்களே தேர்தலின் முடிவைத் தீர்மானிக்கப் போகின்றன.

**வாசகர்களே!**

பிரித்தானிய தேர்தல் விபரங்கள் எமக்கு எவ்வாறு உதவப் போகிறது? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். இங்கு இருமினால் அங்கு காய்ச்சல் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது. ஆளும் கன்சவேட்டிவ் கட்சி பிரித்தானியாவில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு பல வரிச் சலுகைகளை வழங்கப் போகிறது. குறைந்த பட்ச சம்பளம், ஒப்பந்தம் அற்ற வேலை வாய்ப்பு போன்றன தொழிலாளர்களைப் பாதிக்கப் போகிறது. சமீபத்தில் இலங்கை அமைச்சர் ஒருவர் வேலை வாய்ப்புகளில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார். அதன் அர்த்தம் என்ன? தற்போது பலரின் வேலை நீண்ட கால ஒப்பந்தத்தை உடையது. வேலையில் இணைந்த ஒருவரின் 3 மாத கால பரிசோதனைக் காலம் முடிவடைந்ததும் அவரை வேலையிலிருந்து நினைத்த மாத்திரத்தில் விலக்க முடியாது. அதற்கான சட்டப் பாதுகாப்பு உண்டு. அமைச்சர் கூறுவது போல் நெகிழ்ச்சி என்பது முதலாளி தேவைப்படும்போது வேலைக்கு அமர்த்தி, தேவையில்லாத போது வீட்டுக்கு அனுப்ப முடியும். அதுவே இங்குள்ள நிலமையுமாகும். அதாவது 0 மணித்தியால ஒப்பந்தம் (Zero hours contract) என்பார்கள். இவ்வாறான தொழிலாளர்களின் இரத்தத்தைப் பிழிந்தெடுக்கும் சட்ட மூலங்கள் விரைவில் இலங்கையில் நிறைவேறும். ஏனெனில் இலங்கையிலும் செயற்படுவது நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கைகளாகும்.

பிரித்தானியா தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதால் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச சம்பளத்தை வழங்க வேண்டும். ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் பின்னால் அந்நியர்களை வெளியேற்றுவதை ஆதரிக்கும் தீவிர வலதுசாரி சக்திகளும், குறைந்த பட்ச சம்பள வழங்கலை எதிர்க்கும் பல்தேசிய நிறவனங்களும் ஆதரிக்கின்றன. இதனால், தொழிலாளர்களே பெரிதும் பாதிப்படைவர்.

மறு பக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதை ஆதரிக்கும் தொழிற் கட்சி தொழிலார்களின் குறைந்த பட்ச சம்பளத்தை, தொழிற் பாதுகாப்பை, கட்டுப்பாட்டுடன் கூடிய ஐரோப்பியர் வருகையை, தற்போது பிரித்தானியாவில் தங்கியுள்ள ஐரோப்பியர்கள் தொடர்ந்தும் வாழ்வதற்கான உரிமைகளை வழங்கப் போவதாக கூறுகிறது. இவை பிரதான கட்சிகளுக்கிடையே காணப்படும் முக்கிய வேறுபாடுகளாகும். தேர்தலை அறிவித்தபோது தொழிற்கட்சிக்கு மக்கள் ஆதரவு குறைந்து மிகவும் பின்தங்கி படு தோல்வி அடையலாம் என பத்திரிகைகள் ஆருடம் கூறின. தற்போது மிகவும் நெருக்கமாக உள்ளதாக கூறுகின்றன.

தொழிற்கட்சித் தலைவர் ஜெரமி கோபன் அவர்கள் இலங்கைப் பிரச்சனை பற்றி நன்கு அறிந்தவர். 1983 இல் இனக் கலவரம் நடந்தபோது அதனைக் கண்டித்து பல கூட்டங்களில் பேசியவர். இவருக்கு இலங்கையர் பலர் நண்பர்களாக, ஆதரவாளர்களாக உள்ளனர். அதனால் அவர் பிரதமரானால் இலங்கைப் பிரச்சனையில் காத்திரமான பங்கை வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் தொழிற்கட்சி தேர்தலில் வெற்றி பெற வேண்டும். வாக்களிக்கும் தகுதி உடைய புலம்பெயர் இலங்கையர்கள் குறிப்பாக தமிழர்கள் வாக்களித்தால் அது குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த உதவும். இங்கு சில தமிழர்கள் தத்தமது சுய நலன்களுக்காக தொழிற்கட்சித் தமிழர், கன்சவேட்டிவ் தமிழர் என வெவ்வேறு போர்வைகளைப் போர்த்தித் தமிழர்களைக் கூறு போட்டு வருகின்றனர். வெளிநாட்டவர்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கொள்கைகளை தொழிற்கட்சி கொண்டிருப்பதாக நம்புகிறேன். எனவே தொழிற்கட்சியை ஆதரிக்க வேண்டுமென எனது சக புலம்பெயர் தமிழர்களைக் கோருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் இலங்கையர் [தமிழர்] அமைப்பு

**இலண்டனிலிருந்து வி. சிவலிங்கம்**

வாசகர்களே,

புலம்பெயர் இலங்கையர் (தமிழர்) அமைப்பு (NRTSL) ஏன்? அதன் பணிகள் என்ன? இலங்கைத் தாயகத்திற்கும், புலம்பெயர் இலங்கையர்களுக்குமிடையே குறிப்பாக தமிழர்களுக்கிடையே அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இணைப்பினை ஏற்பாடுத்துவது காலத்தின் தேவையாக உள்ளது. போரின் கொடுமைகள் காரணமாக தமது வாழ்விடங்களை, உடமைகளை, சொந்த பந்தங்களைத் துறந்து புலம்பெயர் தேசங்களில் குடியேறியுள்ளார்கள். தாயகத்தில் நிலவும் அமைதியற்ற நிலமைகள் இம் மக்களின் மனங்களில் ஒருவித குற்ற உணர்வுடன் கூடிய கவலைகள் எப்போதுமே உறுத்துகின்றன. பாரம்பரியமாக வாழ்ந்த நிலங்களும், உறவுகளுமே அவர்களுக்கான அடையாளங்களைத் தருகின்றன. இதன் காரணமாக அவசர அவசரமாக வெளியேறிய காரணத்தில் தமது முன்னோர் தமக்களித்த சொத்துகளை உரிய விதத்தில் பராமரிப்பது அல்லது கையளிப்பது அவர்களின் தேவையாக உள்ளது. அங்கு நிலவும் சட்ட விரோத செயற்பாடுகள் சொத்துக்களின் உரிமங்களை மாற்றும் வரை சென்றுள்ளன. இவை கவலை தரும் சம்பவங்களாகும். இவற்றைச் சட்ட அடிப்படையில் தீர்த்து வைப்பது அவர்களின் தேவையாக உள்ளது. இவற்றை அரசின் உதவியுடன் எடுக்கப்படும் முடிவுகளே அவர்களுக்கு மன அமைதியைத் தரக்கூடியவை. இவ்வாறான பல இன்னோரன்ன தேவைகள் அரசியலுக்கு அப்பால் தேசத்தின் பிரஜைகளுக்கான சட்டப் பாதுகாப்பு என்ற வகையில் அரசுடன் பேசித் தீர்ப்பது காலத்தின் தேவையாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு பிரித்தானியாவிலுள்ள புலம் பெயர் மக்களில் ஒரு சாரார் குறித்த புலம்பெயர் இலங்கையர் (தமிழர்) அமைப்பைத் தோற்றுவித்துள்ளனர். இதன் இடைக்கால தலைவராக என்னை நியமித்தள்ளனர். நாம் அரசாங்கத்துடன் குறிப்பாக இலங்கை வெளிநாட்டு அமைச்சுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிலப் பிரச்சனை, பெற்றோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள் போன்றோரின் பிரச்சனைகள் குறித்துப் பேசி வருகிறோம்.

அத்துடன் அரசியல் பிரச்சனைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல்களை அரச தரப்பின் முக்கியஸ்தர்களோடு பேசி வருகிறோம். சமீபத்தில் கடந்த மே மாதம் 21ம் திகதி பிரித்தானியாவிலுள்ள சமூக செய்பாட்டாளர்கள் சிலரை அழைத்து இவை பற்றிக் கலந்துரையாடினோம். அத்துடன் தொழிற்கட்சி வேட்பாளரான கறற் தோமஸ் ( புயசநவ வூாழஅயள) அவர்களை அழைத்து தேர்தலுக்குப் பின் இலங்கை தொடர்பாக அவர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் உரையாடப்பட்டது. தமிழர் தேசியக் கூட்டமைப்பு அரசின் அங்கமாக இருந்தும் அரசியல் தீர்வுக்கான எதிர்காலம் எவ்வாறு உள்ளது? என்பது சார்பாக மக்களுக்கோ அல்லது அரசியல்வாதிகளுக்கோ விபரமாக எதுவும் தெரியவில்லை. இதனால் மக்கள் தமது எதிர்காலம் குறித்து ஓர் நிச்சயமற்ற நிலைக்குள் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளார்கள். இம் மாதிரியான தெளிவற்ற போக்கினை மாற்றுவது எவ்வாறு? என்பது தொடர்பான கலந்துரையாடல் அங்கு இடம்பெற்றது.

ஓர் பலமான புலம்பெயர் சமூக அமைப்பு செயற்படுமாயின் தாயகத்தில் பல சமூக மாற்றங்களைத் தோற்றுவிக்க அவை பெரும் உதவியாக அமையும். எனவே தாயகத்து மக்களும் இவ்வாறான முயற்சிகளில் பங்களிப்பது சாலவும் நல்லது என விநயமாக வேண்டுகிறேன்.

## ஹர்த்தால் அவசியமற்றது

ஹர்த்தால் அவசியமற்றது. மக்கள் தெரிவை மதிக்கவேண்டும் என்று சொல்லி மக்களின் இயல்பு வாழ்வினை முடக்குவது முட்டாள்தனம். மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்கின்றீர்கள். அப்படி ஒரு முடிவை தமிழ் மக்கள் பேரவை எடுத்திருக்குமானால் அவர்களின் தலைமைத்துவம் முட்டாள்தனமானது. அதன் இணைத்தலைவராக விக்கி இருக்கையில் இது முரண் நகையானது அரசியல் உள்நோக்கம் கொண்டது. உண்மையில் முதலமைச்சர் மீது மக்களுக்கு பாசம் என்றால் ஓரிடத்தில் கூடுங்கள்

யாருக்கு எதிராக போராடுகின்றீர்கள் ? தமிழரசுக்கட்சிக்கு எதிராக அதன் மாகாணசபை உறுப்பினர்களுக்காக எனில் அவர்களை முடக்குங்கள். அதைவிட்டு விட்டு தயவு செய்து ஆதிகால முறைகளை பின்பற்றாதீர்கள். தமிழ் மக்கள் பேரவை அண்மைக்காலத்தில் பிழையான முடிவுகளை அரங்கேற்றுகின்றது

கர்த்தால் அறிவிக்க வலம்புரி விசேட பதிப்பு மாலை அச்சிடப்பட்டு 10 ரூபாவிற்கு கடைகளில் விற்பனை

வழமைபோல "ஒற்றுமை" க்காக ஒத்துழைப்பேன் அவ்வளவுதான்

தங்கராசா தவருபன் அவர்களின் முகநூல் பதிவிலிருந்து எடுக்கப்பட்டது.
இது மக்களின் மனநிலையை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றது.



# இலங்கை பழங்குடி மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தல்

**வெளிச்சத்திற்கு கொண்டுவருகிறது பழங்குடி மக்களின் உரிமைகளுக்கான அமைப்பு**

இலங்கைத்தீவில் வாழும் பூர்வீக பழங்குடிகளான நாங்கள் இயக்கர்- நாகர் வழிவந்த வழித்தோன்றல்களாக எம்மைக் கருதுகிறோம். எம்மில் ஒரு பிரிவினர் மகியங்கனையை அண்டிய பகுதிகளில் ஒரு பிரிவாகவும் நாம் வாகரை, வெருகல் மற்றும் மூதூரை அண்டியும் சுமார் 35 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியிலும் வாழ்ந்து வருகின்றோம். எமக்கான பூர்வீக மொழி ஒன்றை நாம் பேச்சு வழக்கில் கொண்டுள்ளோம். எம்மில் சிலர் இன்னும் அதனைப்பேசி வருகின்றனர். ஆனாலும் நாம் தமிழ் மொழியையே பேச்சு மொழியாகக் கொண்டுள்ளோம். இப் பிரதேசத்தின் மிக மூத்த குடிகளாக நாம் இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

கடந்து போன வன்முறைச்சூழல் முழுவதும் யுத்தத்திற்கும் வறுமைக்கும் இடையில் சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்து தற்போது நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்கான காலம் கனிந்துள்ளதாக நம்பிக்கை துளிர்த்திருந்த காலங்களில் எம்மீது திட்டமிடப்பட்ட வகையில் ஏவிவிடப்படும் பொருளாதார ரீதியான முற்றுகை மூலமான நில ஆக்கிரமிப்பு எனும் செயற்பாடு எம்மை இன்று இப்போராட்டக் களத்திற்கு கொண்டு வந்திருக்கிறது.

எமது பூர்வீக கிராமங்களான சாலையூர், சந்தோசபுரம், இளக்கந்தை, பாட்டாளிபுரம் வீரமாநகர், மலைமுந்தல், நீணாக்கேணி, நல்லூர், உப்பூறல், சந்தனவெட்டை, சீனன்வெளி மற்றும் இலங்கைத்துறை முகத்துவாரம் தொடக்கம் வாகரை வரையான நீண்ட நிலப்பரப்பில் நாங்கள் காலம் காலமாக வாழ்ந்து வருகின்றோம். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கென 50 களில் மதிப்பிற்குரிய டி.எஸ். சேனாநாயக்க பிரதமர் அவர்களால் நல்லூரில் உல்லை குளத்தையும் 700 ஏக்கர் வயற் காணிகளையும் ஏற்படுத்தித் தந்ததன் பின்னர் எமது வாழ்க்கை முன்னேற்றம் காணத் தொடங்கிற்று. இக்காலப்பகுதியில் அரசினால் உருவாக்கப்பட்டு எம்மால் இயக்கப்பட்ட பத்தினியம்மன் விவசாய சம்மேளனம் இப்பகுதியின் விவசாய மேம்பாட்டு நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபாட்டைக் காட்டி வந்தது. ஆயினும் கடந்த 30 ஆண்டுகளாக நாட்டிலே நிலவிய கடுமையான யுத்தம் எம்மை மீண்டும் வறுமைக்கோட்டினுள் தள்ளி விட்டதை யாவரும் அறிவீர்கள். மீள முடியாத வறுமையையும் இடப்பெயர்வையும் சொத்து உயிரிழப்புக்களையும் தந்த யுத்தம் முடிவடைந்ததன் பின்பு அயற் கிராம்மான தோப்பூரிலே வசிக்கின்ற முஸ்லீம் முதலாளிகள் சிலரின் திட்டமிடப்பட்ட பொருளாதார சுரண்டல் காரணமாக இன்று நல்லூர் மற்றும் உப்பூறல் ஆகிய கிராமங்கள் முற்று முழுதாக எமது கைகளை விட்டு பறிபோய்விட்டது. அத்துடன் உல்லைக் குளமும் 700 ஏக்கர் வயற்காணிகளும் எம்மிடமிருந்து அடாவடியாகப் பறிக்கப்பட்டிருக்கிறது. எமது மேய்ச்சல் நிலங்கள் அவர்களது தென்னந் தோப்புகளாகியிருக்கின்றது. எமது மேட்டு நிலங்கள் அவர்களது முந்திரிகைத் தோட்டமாகியிருக்கிறது.

அரசினால் எமக்கென வழங்கப்பட்டிருக்கும் காணி அனுமதிப் பத்திரங்கள் எம்வசம் இருக்கும் போதே முஸ்லிம் விவசாயிகளாக தம்மை இனங்காட்டிக்கொள்ளும் முதலாளிகள் அரசின் அனுமதிப்பத்திரத்துடன் தமது விவசாய நடவடிக்கைகளை எமது பூர்வீக மண்மீது ஆரம்பித்து விட்டனர். விவசாய சம்ளேனம் கூட அவர்களுக்கானதாக மாற்றம் கண்டுவிட்டது.

அரச இயந்திரம் அரசியற் செல்வாக்கின் பலம் கொண்டு பாமர பழங்குடி மக்களாகிய எம்மீது கோர ஒடுக்குமுறை ஆயுதம் கொண்டு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வன்முறைக்கெதிராக நாங்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைச் செய்தும் எமது அரசியல் தலைமைகளிடமும் அதிகாரிகளிடமும் முறையிட்டும் எது வித பலனும் இல்லாத ஒரு சூழலில் நாம் வேறு வழிகளின்றி இப்போராட்டத்தை நடாத்த வேண்டிய வரலாற்று தேவை எம் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.

அதே வேளை எமது வாழ்வாதாரத்தின் பெரும் பகுதி தங்கியிருக்கும் எமக்குச் சொந்தமான வனப்பகுதி அரசினால் வன இலாகாவிற்குச் சொந்தமானதாக பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்பு அப்பகுதியில் எதுவித பொருளாதார நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்கு நாம் அனுமதிக்கப்படவில்லை. ஏற்கனவே விளைச்சல் காணிகளைப் பறிகொடுத்திருக்கும் நாம் மேற்படி நடவடிக்கை மூலம் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்டு தற்போது வாழவழியின்றி தவித்து வருகின்றோம். சுய கௌரவத்துடனும் சுயசார்பு பொருளாதார கட்டமைப்புடனும் வாழ்ந்து வந்த ஒரு இனம் யுத்தம் நிறைவடைந்ததன் பின் வீதி வீதியாக யாசகம் கேட்டுப் பிழைப்பு நடாத்தும் கொடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதனை இங்கு பதிவு செய்ய முனைகின்றோம். இந்நிலைக்கான முக்கிய காரணம் எம்மீதான ஒடுக்குமுறையை ஆதரித்து நின்ற அரச இயந்திரமும் அதிகார வர்க்கமுமேயாகும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போராட்டம் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ அன்றி மதத்திற்கோ எதிரானதல்ல. இது எமது இருப்பிற்கான போராட்டம் மட்டுமே. எம்மிடமிருந்து அநியாயமாகப் பறிக்கப்பட்ட ஆக்கிரமிக்கப்பட்ட எமது மண் எமக்கே மீண்டும் திருப்பித் தரப்பட வேண்டும். எங்கள் முற்றத்தின் மீது அமர்ந்து நீங்கள் உங்கள் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்பதை கவனத்திற் கொள்ளுமாறு இத்தால் எமது நில ஆக்கிமிப்பாளர்களை கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன்,

1. சேனைப்பயிர்ச்செய்கை எமது பாரம்பரிய உரிமை. அந்நிலங்கள் எமக்கே சொந்தம்.
2. எமது பாரம்பரிய தொழில்கள் காப்பாற்றப்பட வேண்டும்.
3. எமது குடியிருப்புக்களிலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.
4. மலை நீலியம்மன், பெரியசாமி கோவில்களை ஆக்கிரமித்து இருக்கும் பௌத்த ஆக்கிரமிப்பாளர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும்.
5. எங்கள் பாலக்காட்டு மடு இக்பால் நகரமாகியதும் கோபால புரபட்டணம் 30 வீட்டுத்திட்டமாகியதும் எவ்விதம் என விசாரணை செய்யப்பட்டு அவை எம்மிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.
6. மலைமுந்தல், நல்லூர், உப்பூறல் பகுதிகளை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்படும் சாரீப் நகர் கிராம வேலைத்திட்டம் நிறுத்தப்படுதல் வேண்டும்.
7. உல்லக்குளம் எம்மிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும்.
8. இறால்குளி, சுவாந்திர ஆறு, கொக்கட்டி ஆறுகளில் நாம் தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.
9. முஸ்லிம் மக்கள் மீதான சிங்கள பௌத்த தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை இத்தால் நாம் முன்வைக்கின்றோம்.

அரசே! இவ்விடயம் தொடர்பாக காத்திரமான நடவடிக்கையை மேற்கொண்டு எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை எமக்கே மீளளிப்பதுடன் எமது கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்து மீளவும் இவ்விதமான ஆக்கிரமிப்புக்கள் நடைபெறாமல் இருப்பதனை உறுதி செய்ய வேண்டும் என இத்தால் கோருகின்றோம்.

பழங்குடி மக்களின் உரிமைகளுக்கான அமைப்பு,
நல்லூர், திருக்கோணமலை.
2017 வைகாசி மாதம் 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தரும் செய்தி என்ன?

## அபிமன்யு பதில்கள்

*க. சிவராஜா* *யாழ்ப்பாணம்*

**கேள்வி: வடமாகாண சபை அமைச்சர்களின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழு அறிக்கையின் பிரகாரம் இரண்டு அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து விலக்க முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் நடவடிக்கை எடுத்திருப்பது மக்களுக்கு தரும் செய்தி என்ன ?**

**பதில்:** வடமாகாண சபையின் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை, முதலமைச்சர் தவிர, 4 பேர்தான். இவர்கள் மீது ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மாகாண சபையின் உள்ளேயும், வெளியேயும் முன்வைக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய விசாரணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் பிரகாரம் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த. குருகுலராசா ஆகிய இருவரையும் அமைச்சரவையிலிருந்து விலக்கி புதியவர்களை நியமிக்க முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். முதலமைச்சர் அவர்கள் இருவரிடமும் இராஜினாமாவை கோரியுள்ளார். அமைச்சர் பொ. ஐங்கரநேசன் முதலமைச்சரிடம் தனது இராஜினாமாவை கையளித்துள்ளார். இவை அனைத்தும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் முற்றுமுழுதாக நிராகரிக்கப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

சுகாதார அமைச்சர் பா. சத்தியலிங்கம், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப கிராம அமைச்சர் பா. டெனீஸ் வரன் ஆகிய மிகுதி இருவர் மீதும் கூட ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவற்றை விசாரிப்பதற்கான குழுவை நியமிக்கவுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்து வருகிறார். எனவே குற்றச்சாட்டுக்களுக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இருவர், குற்றம்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணை செய்யப்படவுள்ள இருவர் என வடமாகாண அமைச்சர் அவையில் உள்ள அமைச்சர்கள் நால்வரும் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர். அமைச்சுகளுடன் தொடர்புடைய உயர் அதிகாரிகள் சிலர் மீதும் கூட நடவடிக்கை எடுக்க விசாரணையாளர்கள் சிபார்சு செய்துள்ளனர்.

இவ்வாறான முறைகேடுகளுக்கு காரணமான அமைச்சரவையின் முதல் அமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். நீதியரசர் என்ற பட்டம் கொண்டவர், ஆன்மிகநெறி நிற்பவர் தனது முதன்மையானதும், முக்கியமானதுமான மாகாண சபை முதலைமைச்சர் என்ற பணியை, விடுத்து, ஏதோ தானே அனைவரையும் மீறிய தமிழர்களின் தற்போதையை ஒரே தன்னிகரில்லாத் தலைவன் என்ற தோரணையில் முதலைமைச்சருக்கான கடமைகளை புறந்தள்ளி, 'தமிழர்களின் தேசியம்', 'இனப்படுகொலை' என்று பேசியே காலத்தை வீணடித்துக் கொண்டு, தனது அமைச்சரவைக்குள் நிலவிய சீர்கேடுகளை தடுக்க முடியாத கையாலாகாதவராகக் காணப்படுகிறார். ஆக, அவரும் தனது அமைச்சர்கள் மீது தெரிவிக்கப்பட்ட, விசாரணைக் குழுவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்.

இத்தனையும் நடக்க "அது வடமாகாண சபை விடயம், முதலமைச்சர் பார்த்துக் கொள்வார்" என்று சொல்லி நழுவுகிறார் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே கட்சி என சொல்லிக்கொள்ளும் கூட்டமைப்பின் (ரி.என்.ஏ) தலைவர் இரா. சம்பந்தன்.

'ஈழம்' என்ற தமிழ்த் தேசம் ஒன்று வேண்டும் எனப் போராடிய, அதற்காக தங்கள் வாழ்வையே அரப்பணித்த, உடமைகளையும், வாழ்வாதாரங்களையும், வாழ்க்கையையும் இழந்தவர்களைக் கொண்ட ஒரு இனத்தைச் சேர்ந்த நாம், கேவலம் ஒரு மாகாண சபையையே, ஒழுங்காக, அது எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ, அவற்றை நிறைவேற்றி மக்களுக்கு வாழ்வளிக்க முடியாதவர்களைத்தான் நம் தலைவர்களாகக் கொண்டிருக்கிறோம், தமிழர்கள் வெற்றுப் பேச்சு வீரர்கள் என்பதை இதுவும் சேர்ந்து நிருபணமாக்கி விட்டது!.

இது வெட்கக் கேடு! தலைக்குனிவு!. சிங்கள அரசியல், சமூக தலைவர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எம்மைப் பற்றி நன்றாகத் தெரியும். - நாம் மாரித் தவளைகள் மாதிரி, 'சீசனுக்குச் சீசன்' கத்திக் கொண்டிருப்போம், 'சீன்' போடுவோம் என்று!. - அதனால்தான் நாம் அவ்வப்போது கத்தும் 'சீன்" போடும் வேளைகளில் ஏதோ கரிசனையாகக் கேட்பதுபோலும், பார்ப்பதுபோலும் அவர்களும் 'போஸ்' கொடுப்பார்கள். ஆனால், தங்கள் தலையில் தாங்களே மண்ணைப் போட்டு அழியும் தமிழ் மக்களும், அதற்கேற்ற தமிழ்த் தலைவர்களும் என்று எம்மை அவர்கள் நன்றாகவே படித்து வைத்திருக்கிறார்கள்!.

இவை எல்லாமும் தான் தமிழ் மக்கள் தெரிந்து, புரிந்துகொள்ள வேண்டிய செய்திகள்.

(((O)))

*அ. அருட்சந்திரன்* *மூதூர்*

**கேள்வி: பாராளுமன்றப் பிரதிநிதிகள் என்ற கோதாவில் பிரத்தியேகமாக வழங்கப்பட்ட இலவச மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை தனியாருக்கு விற்று கோடிக் கணக்கான பணத்தைப் பெற்றவர்களின் பட்டியலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த சில முக்கிய புள்ளிகளின் பெயர்களும் இருக்கின்றதே ?**

**பதில்:** சிங்கள, முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களை விடுங்கள். ஊழல்கள் மிகுந்தவர்கள் அங்கும் நிறைய இருக்கிறார்கள் தான். எனினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், வேண்டிய வகையிலோ அளவிலோ இல்லாவிட்டாலும், சிங்கள, முஸ்லிம் மக்களின் நலன்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால் தமிழ்மக்களின் அரசியல் தலைவர்கள்???... அளப்பரிய உயிர் அர்ப்பணிப்புகள், உயிர், அவய இழப்புகள், உடைமை அழிவுகள், இடப்பெயர்வுகள், ஜீவாதாரக் குறைபாடுகள், சீர்குலைவுகள் ஆகியவற்றிற்குப் பின்னரும், இவர்களும், இவர்கள் போன்றவர்களுந்தான் எமது அரசியல் தலைவர்கள் என்றால், நிச்சயமாக எங்கள் சமூகத்தின் மத்தியில் ஏதோ ஒரு மிகப் பெரிய ஊனம் இருக்கிறது. வெறுப்பு அரசியலும், வெற்று வாக்குறுதிகளும், ஊழல் புரையோடிய நிர்வாகமும், மனிதர்களும், மலிவான தந்திரங்களுமே இவர்களது அரசியல்.

ஆனால், அதே பிரமுகர்களை, அல்லது அவர்களைப் போன்றவர்களைத்தான் இந்தத் தமிழ்ச்சாதியும் தமது வாக்குகளை அளித்து தமது பிரதிநிதிகளாக அவர்களுக்கு மகுடம் சூட்டி மகிழ்கிறது. இந்த நிலை நீடித்தால், இப்பொழுது இருக்கும் அவல நிலையிலும் பார்க்க எதிர்காலத்தில் மேலும் கேவலமான நிலையில்தான் இந்தச் தமிழ்ச்சாதி இருக்கும்.

"இதோ, தமிழ் மக்களே! தேரை இருப்பிடம் கொண்டு சேர்க்கிறோம், வடத்தை விடாது இறுகப் பற்றி இழுங்கள்" என்பார்கள். தேர் நகருவது போன்ற மாயை இருக்கும். அவர்களோ தேரின் அலங்கரித்த இருக்கையில் உல்லாசமாக இருந்து கொண்டிருப்பார்கள். தேர் அப்படியே சகதியில் சிக்குண்டு என்றுமே இருப்பிடம் செல்லாது. வடம் இழுத்த மக்களும் தலையில் கையை வைத்துக் குந்தியிருப்பார்கள்!.

அடுத்த தேர்தல் வரும்... ஞதேரில் இருப்பவர்கள் மறுபடியும் "தமிழ் மக்களே! வடத்தை இறுகப் பற்றி இழுங்கள், இந்த முறை தேரை இருப்பிடம் சேர்ப்போம்" என்பார்கள். அதுவரையில் தலையில் கைவைத்துக் குந்தியிருந்த தமிழ்ச்சாதியும் எழுந்து வடத்தைப் பிடிக்கும். ...கதை தொடரும்..!..

(((O)))

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு
உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

# மாகாணசபைக்கு ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

சகோதரப் படுகொலைகள், சகோதர சமூகப் படுகொலைகள் தலைவர்கள், அண்டை நாட்டு தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட போது சொந்த சமூகத்திற்கும் சக சமூகங்களுக்கும் அநீதி இழைக்கப்பட்ட போது எமது ஜனநாயக பிரக்ஞை பற்றி உலகம் சந்தேகம் கொண்டு பார்த்தது.

கேலியும்- கிண்டலும்- இழிவும்- சாபமும் கிட்டியது.

தற்போது மாகாண சபையை கூட நேர்த்தியாக நடத்தத் தெரியாதவர்கள், கையாலாகாதவர்கள் என்ற அவப்பெயர்.

அதுவும் புதிதாக பெரும் எதிர்பார்ப்புடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை அற்ப ஆயுளில் ஊழல் அதிகார துஸ்பிரயோகத்தில் மூழ்கியிருக்கிறது.

மாகாணசபை ஆக்க பூர்வமாக எதையும் மக்களுக்குச் செய்வதென்பதை விட கதா கலாட்சேப கதம்ப மேடையாக, அங்காடியாக மாறியிருக்கிறது.

பாராதியார் சொல்லுவாரே "கூட்டத்தில் கூடிநின்று கூவிப்பிதற்றலன்றி நாட்டத்தில் கொள்ளாரடி நாளில் மறப்பாரடி" மகா கவியின் இந்த வார்த்தைகளுக்கு வரைவிலக்கணப் பொருத்தம் கொண்டதாகவே வட மாகாண சபை காணப்படுகிறது.

மக்களுக்கு ஏராளம் பிரச்னைகள். ஆனால் ஊடகங்கள் கோஸ்டி முரண்பாடுகளையும் அந்தந்த கோஸ்டிகளின் கதாநாயகர்களையுமே முன்னிலைப்படுத்துகின்றன

இந்த அவல நிலை தமிழர்களின் எதிர்காலம் பற்றி நியாயமான கவலைகளை ஏற்படுத்துகிறது.

மக்களின் நிலம் - குடி நீர் - நீர் - சுற்றாடல் தொழில் - கல்வி - போக்குவரத்து - பாதைகள் சுகாதாரம்

விலைவாசி - வறுமை

வாள்வீச்சு வன்முறை - நாளாந்த வீதி விபத் துக்கள் அநியாயமரணங்கள்

போதை வஸ்து - கேரளாகஞ்சா

டெங்கு மற்றும் புதுப்புது நோய்கள், மாரடைப்பை கொண்டுவரும் வைத்தியசெலவு

நீடித்த மிதமிஞ்சிய இராணுவ பிரசன்னம்

நிலத்துக்காக, வீட்டுக்காக, நீருக்காக, சிறந்த சுகாதாரமான சுற்றாடலுக்காக, வேலை பெறும் உரிமைக்காக, காணாமல் போன உறவுகளுக்காக, சிறையில் இருப்பவர்களுக்காக, பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக, பாதுகாப்பான வாழ்விற்காக கல்வியை சுகாதார சேவையை வியாபாரமாக்கும் செயற்பாடுகளுக்கெதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள் பல போராட்டங்கள் மாதக்கணக்கில் நிகழ்கின்றன.

மக்கள் பற்றிய ஆழமான தீவிர கரிசனை வேண்டும்.

சமூக நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள்

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பாதுகாப்பு.

விவசாயம், மீன்பிடி, மரபு ரீதியான தொழில் களின் பாதுகாப்பு, உற்பத்தி மற்றும் சந்தை வசதிகளை அதிகரித்தல்

சட்டம் ஒழுங்குத்துறை, அரசநிர்வாகம் மக்களுடன் கண்ணியமான சேவை நிறுவனங்களாக இயங்க வழிசெய்தல் என ஏராளம் பணிகள் இருக்கின்றன.

சகல வளங்களையும் திரட்டி மக்களுக்காக செயற்படுவதாக மாகாண சபை தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். தகவைமைத்துக் கொள்ள வேண்டும்.

செயற்படும் வல்லமை நிரூபிக்கப்படாவிட்டால் யாரும் கண்டுகொள்ளப் போவதில்லை.

முயற்சித்தால் மக்களுக்கு ஆற்றுவதற்கு ஆயிரம் காரியங்கள் இருக்கின்றன.


வேற்றுமையில் ஒற்றுமைகண்டு சேர்ந்து முயற்சிக்க வேண்டும்.

சமூகத்தில் துறைசார் ஆற்றலுள்ளவர்கள் அர்ப்பண உணர்வு கொண்டவர்களின் ஆலோசனைகள் பங்களிப்புகள் பெறப்பட வேண்டும் செய்வார்களா???

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோழர் ராஜன்**
இராசரத்தினம் இரவீந்திரன்
கோப்பாய்




**தோழர் பாஸ்கரன்** ஏறாவூர் — **தோழர் லிங்கேஸ்** மன்னார்




**தோழர் நாபா** பருத்தித்துறை — **தோழர் சாந்தன்** பெரியகல்லாறு

கடல் அலைகள் உங்கள் வீர நினைவுகளை





**தோழர் தயாளன்** திருகோணமலை — **தோழர் சந்திரன்** மயிலிட்டி — **தோழர் ரஞ்சன்** மயிலிட்டி

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஜுன் மாதத்தில் உயிர்நீத்த தோழர்களில் நாம் சேகரித்தவை மட்டும் போராட்டத்தில் உயிர்நீத்த அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவோம்



கிருபாகரன்


மிஹிலார்


பத்மநாதன்


யோகசங்கரி


அன்புமுகுந்தன்




லிங்கன்


கவிதா

தமிழகத்தின் தலைநகர் சென்னையில்
1990 யூன் 19 அன்று படுகொலை செய்யப்பட்ட
எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா
அவர்களுடன் மரணித்த தோழர்கள்


ஜசிந்தா


ரவி


தருமன்


கோமளராஜா


புவிநாதன்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| கந்தசாமி பத்மநாபா | ரஞ்சன் | 19.06.1990 | காங்கேசன்துறை |
| க. யோகசங்கரி | சங்கரி | 19.06.1990 | யாழ்ப்பாணம் |
| த. சுபத்திரன் | றொபேட் | 14.06.2003 | சாவகச்சேரி |
| இ. ரவீந்திரன் | ராஜன் | 07.06.1985 | கோப்பாய் |
| மா. மனோகரராஜா | காஸ்ரோ | 01.06.1987 | சாவகச்சேரி |
| சி. கணேசதாஸ் | ரஞ்சன் | 12.06.1986 | சாவகச்சேரி |
| ஆ. மன்மதராஜா | ஆனந்த் | 19.06.1989 | தெல்லிப்பளை |
| | சுரேஸ் | 26.06.1989 | பலாலி |
| | சீலன் | 04.06.1989 | தொண்டமானாறு |
| | ரஞ்சன் | 03.06.1985 | மயிலிட்டி |
| | சந்திரன் | 03.06.1985 | மயிலிட்டி |
| | தயாளன் | 03.06.1985 | திருகோணமலை |
| ஜேம்ஸ் யூட் | | 05.06.1990 | குருநகர் |
| பி. கிருபாகரன் | கிருபா | 19.06.1990 | காரைதீவு |
| ஜி. பத்மநாதன் | ரவி | 19.06.1990 | தம்பிலுவில் |
| ஜே. செல்வராசா | தர்மன் | 19.06.1990 | காரைதீவு |
| எஸ். புவனேஸ்வரி | ஜெசிந்தா | 19.06.1990 | காரைதீவு |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| | கவிதா | 19.06.1990 | சேனைக்குடியிருப்பு |
| கே. கோமளராசா | ஜயா | 19.06.1990 | மட்டக்களப்பு |
| எம். மிகிலார் | கமலன் | 19.06.1990 | மருதமுனை |
| எம். பாஸ்கரன் | பாண்டியன் | 01.06.1985 | ஏறாவூர் |
| எல். விமலதாசா | விமல் | 12.06.1985 | கிரான் |
| ஈ. ஜெயராஜா | ஜெயா | 12.06.1985 | கிரான் |
| கே. பரமேஸ்வரன் | கவி | 18.06.1986 | தாளங்குடா |
| எஸ். கிருஸ்ணமூர்த்தி | கிட்டு | 12.06.1986 | செங்கலடி |
| ரீ. ராஜரட்ணம் | நித்தி | 15.06.1986 | ஏறாவூர் |
| ரீ. தேவராஜா | ராஜா | 02.06.1987 | புதுக்குடியிருப்பு |
| ஜே. தெய்வநாயகம் | தீரன் | 22.06.1989 | காயன்கேணி |
| திரவியநாதன் | லிங்கன் | 19.06.1990 | தம்பலகாமம் |
| எஸ்.முகுந்தன் | அன்புமுகுந்தன் | 19.06.1990 | திருகோணமலை |
| | ஜெகன் | 16.06.1990 | நிலாவெளி |
| கணேசலிங்கம் | வரதன் | 11.06.1986 | வவுனியா |
| | ராமு | 11.06.1986 | செட்டிகுளம் |
| | கோபி | 11.06.1986 | பம்பைமடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 ஆவது தியாகிகள் தினம் 19 ஜூன் 2017



அ. அமிர்தலிங்கம்


சிறி சபாரட்ணம்


விஸ்வானந்த தேவர்


சுந்தரம்


மனோ மாஸ்டர்



ராஜன் சத்தியமூர்த்தி


ராஜினி திரணகம


நீலன் திருச்செல்வம்


ஆனந்தராஜா


பஞ்சலிங்கம்


க. இராஜதுரை


எல். கேதீஸ்வரன்

அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், அரசு அதிகாரிகள் போன்ற பலர் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மையினங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கு பங்களிப்பை நல்கியதுடன் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளான கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்காகக் குரல் கொடுத்தனர். அமைப்பாகச் செயற்படுவதற்கான உரிமை நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்துச் செயற்பட்டனர். இவ்வாறு சமூக அக்கறையோடு செயற்பட்ட பலர் இதற்காகத் தமது உயிரை காவுகொடுக்க வேண்டியேற்பட்டது. அவர்கள் அனைவரையும் தியாகிகள் தின நாளில் நன்றியோடு நினைவு கூருவோம். இவர்கள் ஏகஅதிகாரத்தை ஏற்க மறுத்தவர்கள். "எல்லாரும் சுட்டவை" என்பதற்கப்பால் கொலைக்கலாச்சாரத்தின் மூலம் எது. குறிக்கோள் எத்தகையது என்பதை இவர்களது மரணங்கள் உயர்த்தி உரைக்கும்.


பொன். மதிமுகராசா


மகேஸ்வரி வேலாயுதம்


ரேலங்கி செல்வராசா


எஸ். கணேசபிள்ளை



பாலநடராஜா ஐயர்


சாம் தம்பிமுத்து


மு. கணேசகுமார் (ராசிக்)


விமலேஸ்வரன்


செழியன் பேரின்பநாயம்


பெ. சூரியமூர்த்தி


சரோஜினி யோகேஸ்வரன்


செல்வி


தங்கத்துரை


யோகேஸ்வரன்


சபாலிங்கம்


கரவை கந்தசாமி


சிவபாலன்


விஜயாநந்நன்

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம். அவர்களால் இல 76, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் மலர் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org